10

முதியோர் கல்வி

மலர் 1] நவம்பர் 1951 [இதழ் 4

1002
4.17

ஒத்துழைப்போம்!

1 அறியாமை மூழ்கிக்கிடக்கும் நம் நாட்டிலே!
நம் இந்தியமக்கள் படும் கஷ்டத்திலே!—ஏற்படும்
நஷ்டத்தை போக்க—பாடுபடும்
முதியோர் கல்வியுடன் ஒத்துழைப்போம்!
நாம் ஒத்துழைப்போம்!

2 சுதந்திரத்தின் சுக வாழ்வை அடையாமல் என்றும்
அவதிப்படும் நம் சகோதரர்களை
தூய்மையாக்க தொண்டு புரியும்
முதியோர் கல்வியுடன் ஒத்துழைப்போம்!
நாம் ஒத்துழைப்போம்!

3 கல்வி யறிவு இல்லாததாலே—ஏற்படும்
சண்டை சச்சரவுகளை போக்கடித்து
ஒற்றுமை ஏற்படுத்த, ஊக்கத்துடன் உழைத்துவரும்
முதியோர் கல்வியுடன் ஒத்துழைப்போம்!
நாம் ஒத்துழைப்போம்!

4 பணக்காரர் முதல்—பாமர ஏழைகள்வரைக்கும்
ஜாதி, மத பேதமில்லாமல் சுயநலமற்ற
தியாகத்தினால்—தன்
தேசத்தின் அறியாமையை போக்க பாடுபட்டு வரும்
முதியோர் கல்வியுடன் ஒத்துழைப்போம்!
நாம் ஒத்துழைப்போம்!

—ஜயன்

28 DEC 1951
MADRAS

S I A E A

தென்னிந்திய முதியோர் கல்வி சங்கம், சென்னை 1

பொருள் அடக்கம்

பக்கம்

முதல் பகுதி

ஜனநாயக வெற்றிக்கு எழுத்தறிவிப்பு அத்தியாவசியம் ... 69

சென்னை நகர முதலாவது முதியோர் கல்வி மகாநாட்டின் நடவடிக்கைகளும், தீர்மானங்களும் 71

எழுத்தறிவின்மைக்கு சாவுமணி அடியுங்கள்!—ஜயன் 79

செய்தி சுருள் 80

இரண்டாம் பகுதி

எழுத்தறிவு பாடங்கள் 83

மூன்றும் பகுதி

படியாத பட்டுசாமி (நாடகம்) 85

மாதர் பகுதி 87

சந்தா விகிதம்

		ரூ.	அ.
வருட சந்தா	...	2	0
தனிப்பிரதி	...	0	2

விளம்பர விகிதத்திற்கு எழுதவும்.

●

முதியோர் கல்வி
2/21, முதல் லேன் பீச் ரோட்,
சென்னை-1.

எழுத்தாளர்களுக்கு விண்ணப்பம்

முதியோர் கல்வி தொண்டர்களும், புதியதாகப் படிக்க பழகுபவர்களும் நம் பத்திரிகைக்கு கதைகள், கட்டுரைகள், முதியோர் இயக்கச் செய்திகள் எழுதி அனுப்பலாம். ஜில்லாக்களிலும், தாலுக்காக்களிலும் எங்கள் நிருபர்களாக இருக்க முதியோர் கல்வி தொண்டர்கள் தேவை.

மற்ற விபரங்களுக்கு எழுதவும்.

ஆசிரியர்,
2/21, முதல் லேன் பீச் ரோட்,
சென்னை-1.

படியாதவர் படும்பாடு

வெள்ளித்திரைப் படம் கூடிய சீக்கிரம் வெளிவரும்.

தமிழ் நாட்டு மக்கள் அனைவரும் அளவு கடந்த ஆதரவு அளிக்கக் கோருகிறோம்.

22476 28 DEC 1951 MADRAS

முதியோர் கல்வி

(தென்னிந்திய முதியோர் கல்விச் சங்கத்தின் மாத இதழ்)

மலர் 1	நவம்பர் 1951	இதழ் 4

ஜனநாயக வெற்றிக்கு எழுத்தறிவிப்பு அத்தியாவசியம்

இந்தியா தனக்குத்தானே ஒரு அரசியலைத் தயாரித்துக் கொண்டிருக்கிறது. இதை "உயர் மாதிரியான அரசியல்" என்று நம் குடியரசின் முதல் ஜனாதிபதி ராஜன் பாபு புகழ்ந்திருக்கிறார்; மிக உன்னதமான முறையில் வகுக்கப் பட்டு சீரிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ள பல மேனாட்டு அரசியல்களில் காணப்படும் சிறந்த அம்சங்கள் யாவும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு இந்திய வாழ்க்கைக்கு ஏற்றவாறும், அதன் நல் வளர்ச்சிக்கு உகந்தவாறும், பொறுத்தப் பட்டிருக்கின்றன; இத்தகைய அரசியலின் முக்கியாம்சம் இதில் யுக்த வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை வழங்கப்பட்டிருப்பதுதான்.

இந்த ஓட்டுரிமை இந்தியா சம்மந்தப்பட்ட மட்டில் காலத்துக்கு ஒவ்வாதது என்று அறிஞர்களில் சிலர் கருதுகிறார்கள்; இந்நாட்டில் நூற்றுக்கு 80-க்கு மேலானவர்கள் எழுத்து வாசனை இல்லாதவர்களாகும். போதிய கல்வி அறிவு அற்றவர்களாகவும், கல்வி வாசனையே எட்டாதவர்களாகவும் இருப்பதே இவர்கள் கூறும் காரணம். இவர்கள் கூற்று சரியானதல்ல; இவர்கள் ஜனநாயகத்தை அறியவில்லையென்றோ அல்லது ஜனநாயகத்தில் இவர்களுக்கு நம்பிக்கை யில்லையென்றோதான் சொல்லவேண்டும்.

ஜனநாயகத்தின் அஸ்திவாரம் மிகப் பரந்ததாகவும், நன்கு பதிந்ததாகவும் இருக்கவேண்டும்; அப்பொழுதுதான் அது விரைவில் பூத்து நல்ல கனிகளைக் கொடுக்கும்; அந்நிலையிலேயே சமூக முன்னேற்றத்தையும், சமூக க்ஷேமத்தையும் காணமுடியும். நீந்தக் கற்றுக்கொள்ள வேண்டுமானால் நீரில் இறங்கித் தான் ஆகவேண்டும். தங்களுடைய விவகாரங்களை தாங்களே கவனித்துக்கொள்ளும் பொறுப்பை ஜனங்களிடம் விட்டால் வெகு விரைவில் அவர்கள் அதை நன்குச் செய்யக் கற்றுக்கொண்டு விடுவார்கள்; ஆரம்பத்தில் அவர்கள் தவறுகள் செய்யலாம்; இது சகஜம்; ஆனால் இந்த அனுபவம் அவர்களுக்கு பெரிதும் அனுகூலமாக இருக்கும். இந்த அனுபவத்திலிருந்து சரியானக் கொள்கைகளும், திட்டங்களும் பிறக்கும்; திறமையும், சக்தியும் வாய்ந்த உண்மைத் தலைவர்கள் தோன்றி உகந்த வழி காட்டுவர்.

சுபாவத்திலும்சரி, பரம்பரை தர்மத்தை ஒட்டியும்சரி, இந்திய மக்கள் சாந்த புருஷர்கள்; சகிப்புத்தன்மை வாய்ந்தவர்கள்; உயர்ந்த பகுத்தறிவுப் படைத்தவர்கள்; சிறந்த விவேகிகள்; தவறு செய்தால் அதற்காக உண்மையில் வருந்தக்கூடியவர்கள்; எனவே ஒற்றுமையும், நல்லெண்ணத்தையும், நீதியையும், தர்மத்தையும் அடிப்படையாகக் கொண்ட உலகில் எங்குமே காணாத உயர்மாதிரியான அரசியலை வகுக்க அவர்கள் பெரிதும் தகுதிவாய்ந்தவர்கள்.

சாந்த வழியினாலும், தானே பல இடர்களை அனுபவித்தும், சொந்த தியாகத்தினாலும், எதிரிக்குத் துளியும் தீங்கிழைக்காமலுமே இந்தியா அரசியல் சுதந்திரத்தைப் பெற்றது. ஆகவே எந்தவித வகுப்புப் போராட்டம் இல்லாமலேயும், சகோதரத்வத்தை பெருக்கியும், அஹிம்ஸா முறையில் புதிய சமூக ஏற்பாட்டையும், அரசாங்கத்தையும் உருவாக்க அதனால் முடியும்; நிச்சயம் அதை அது செய்தேதீரும். இந்நோக்கம் நிறைவேற சிறந்த ஆயுதம் வயது வந்தவர் ஓட்டுரிமை.

பாமர மக்களில் பெரும்பாலோர் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாயினும் மேற்படி ஓட்டுரிமையை விவேகமான வழியில் உபயோகிப்பர், இந்த சக்தி இயற்கையாகவே அவர்

களுக்கு உண்டு என்பதை வரப்போகும் முதல் பொதுத் தேர்தல் நன்கு நிரூபிக்கும் என்பதில் நமக்கு சிறிதும் ஐயமில்லை. எழுதப் படிக்கத் தெரிந்துவிட்டாலோ அவர்கள் இன்னும் அழகாக நடந்துக்கொள்வார்கள். காலச் சக்கரம் மிக மெதுவாக சுழன்ற காலத்திலும், மாட்டு வண்டியைத் தவிர வேறு போக்கு வரத்துச் சாதனம் இல்லாத சமயத்திலும், வாழ்க்கைச் சம்பவங்களைக்கொண்டு தான் அனுபவபூர்வமாக அறிவைத் தீட்ட வேண்டும்.

ஆனல் இப்போது அப்படியில்லை; இது அணுகுண்டு யுகம்; காலசக்கரத்தின் சுழற்சி இமைப்பதைக் காட்டிலும் வேகமாக நகருகிறது; சமூகத்துறையிலும், பொருளாதார வகையிலும், புரட்சிகரமான மாறுதல்களை காண்கிறோம்; இது ஒரே உலகம்; இதில் வாழ்வோர் அனைத்தும் ஒரே சமூகம் என்கிற உணர்ச்சி எங்கும் பாவிக்கிடக்கிறது; ஒரே வித ராஜ்யம் வேண்டும் என்ற அவா பெருக்கெடுத்து நிற்கிறது, ஆதலால் சமூகக் குடும்பத்தின் ஒரு அம்சம் என்ற நிலையில் தன்னுடைய நாட்டுக்குப் பெருமைதேட ஒவ்வொருவரும் தம் முழுசக்தியையும் உணர வேண்டியது அவசியம். விஷயங்களை தானே கண்டு அறிந்துக்கொண்டாலன்றி தனக்குரிய உயரிய பங்கை பூரண வளர்ச்சியை ஒவ்வொருவரும் என்னமாகப் பெற முடியும்? மனிதன் இனி எழுத்தறி வில்லாதவனுகவும், கல்வி வாசனை அற்றவனுகவும் இருக்க முடியாது.

முதியோர் கல்வி இயக்கத்தை எழுத்தறிவில்லாத முதியோர்கள் ஆட்சேபிக்கவோ அல்லது எதிர்க்கவோ இல்லை; படித்துவிட்டதாகச் சொல்லிக்கொள்கிறுர்களே அவர்கள் தான் ஆட்சேபிக்கிறுர்கள், எதிர்க்கிறுர்கள்; மலை போன்றுஎதிரே நிற்கும் வேலையின் அளவைப்பார்த்து இவர்கள் மலைத்து நிற்கிறுர்கள். மஹாத்மாகாந்தி நமக்கு வழிகாட்டியாக வருவதற்கு முன்னல் தீவிரவாதிகள் எனப்படுவோரில் பலரும் என்ன எண்ணினர்கள் தெரியுமா? அன்னிய ஆட்சியை இந்நாட்டிலிருந்து ஒழிக்க பலயுகங்களாகும்; அதுமட்டுமன்றி பெருத்த போராட்டங்களில் இறங்க வேண்டிருக்கும், பல சிறந்த புருஷர்களை தியாகம் செய்ய வேண்டியிருக்கும் என்றெல்லாம் நினைத்தார்கள். ஆனல் காந்ஜியின் காந்த சக்தி மகிமையினல் இந்தியா தன்னுடைய சக்தியை உணர்ந்து அடிமைத் தளைகளை அறுத்து எறிந்தது.

முதியோர் எழுத்தறிவிப்பு இயக்கத்துக்கு தக்க காலத்தில் உத்வேகம் ஊட்ட வேண்டும். இத்தகைய உத்வேகத்தை தென்னிந்திய முதியோர் கல்விச் சங்கம் ஒருவாறு அளித்திருக்கிறது. சங்கத்தினல் ஏற்பாடு செய்யப்பட்டு அதன் ஆதரவில் நடந்து வரும் முதியோர் கல்வி வாரம் ராஜ்யமெங்கும் புதிய விழிப்பை உண்டாக்கியிருக்கிறது. கல்வி இலாகா அதிகாரிகள் மட்டுமன்றி நிர்வாகத்தைச் சேர்ந்த எல்லோரும் எழுத்தறிவின்மையை ஒழிப்பதில் முனையவேண்டும் என்று சர்க்காரே உத்திரவு பிறப்பித்திருக்கிறுர்கள். தென்னுற்காட்டில் நடப்பதுபோல் எல்லா ஜில்லாக்களிலும் இந்த உத்திரவு உத்சாகத்துடன் நிறைவேற்றப் படுமானல் முதியோர் எழுத்தறிவிப்பு இயக்கம் புதிய வேகத்தைத் திரட்டிக்கொண்டு முன்னேறும்; சூழ்நிலைமை மிகவும் சாதகமாக உள்ள நம் தமிழ் நாட்டில் குறைந்தது ஐந்தே வருஷங்களுக்குள் எல்லோரையும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக்கி விடலாம். படித்தவர்களிடையே சற்று அதிகமான தெளிந்த சிந்தனையும், சமூகக் கடமையில் பொறுப்பு, உணர்ச்சியும் மட்டும் காணப்பட்டால் போதும்; காரியம் கைகூடிவிடும்.

(79-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட இருக்கிறது... ஆனல் இன்று கல்வியை அழிக்க முடியுமா? அதற்கு எந்த ஆயுதமிருக்கிறது... இல்லை! கண்டிப்பாக இல்லை! ஏன்? கல்வி மனிதனுடைய மூளையிலே கலந்துவிட்ட ஓர் அழியாப்பொருள். மனிதன் அழிந்தால் கூட அவனுடைய கல்வி அவனுடைய தரத்தை பிற்காலத்திலே உயர்த்துகிறது.

இன்றைய உலகத்திலே விஞ்ஞான ஆராய்ச்சியின் உதவியால் கண்டு பிடிக்கப்பட்டிருக்கும், உலகத்தை அழிக்கும் பொருள்கள் ஏற்பட காரணம் கல்விதான். ஆகையால் கல்வியை அழிக்க ஏது பொருள். அது இன்றியாமையாத ஓர் உன்னதப் பொருளல்லவா?

ஆகையால் கல்வியை பரப்புங்கள்? எழுத்தறிவின்மைக்கு சாவுமணியடியுங்கள்?

சென்னை நகர முதலாவது முதியோர் கல்வி மகாநாட்டின் நடவடிக்கைகளும், தீர்மானங்களும்.

'கட்டாய முதியோர் எழுத்தறிவுப்பு வேண்டும்'—(சென்னை மேயர்)

ஆரம்பக் கல்வி செழித்தோங்குவதற்கு முதியோர் கல்வி அவசியம்—(திரு. கோபால்)

1951-ம் வருஷம் அக்டோபர் மாதம் 6-ந்தேதி சென்னை ராஜாஜி ஹாலில் கூடிய முதல் சென்னை நகர முதியோர் கல்வி மகாநாட்டை ஆரம்பித்து வைக்கையில் மேயர் திரு. ஆர். ராமநாதம் செட்டியார் அறிவித்ததாவது :—

"முதியோர் எழுத்தறிவிப்பை கட்டாய மாக்கினால் அன்றி, கட்டாய ஆரம்பக்கல்வியை அமுல் நடத்த சர்க்காரோ அல்லது வேறு எந்த ஸ்தாபனமோ செய்யும் முயற்சிகளெல் லாம் நிச்சயமாக வீணாகும்; ஒருக்கால் பண விரயமும் ஏற்படலாம்"

மூன்று ஆண்டுகளுக்குள் சென்னை நகரில் நூற்றுக்கு நூறு பேர்களுக்கு எழுத்தறிவு ஊட்ட சென்னை நகர முதியோர் கல்வி சங்கம் தயாரித் துள்ள திட்டத்தை ஒரு சப்-கமிட்டியின் பரிசீல னைக்கு மகாநாடு விடுத்தது.

சென்னை நகர முதியோர் கல்வி சங்கத்தின் ஆதரவில் மகாநாடு கூட்டப்பட்டது. முன்னாள் கல்வி இலாகா உதவி அதிகாரி திரு. எஸ். சச்சி தானந்தம் பிள்ளை தலைமை வகித்தார். முதியோர் கல்வி சம்பந்தமான ஒரு கண்காட்சியும் மகாநாட்டின் இரண்டு தினங்களிலும் நடத்தப்பட்டது. இந்தக் காட்சியை கார்ப்பரேஷன் கவுன்சிலர் திரு. ம. பொ. சிவஞானம் ஆரம்பித்து வைத்தார். கண்காட்சியில் சென்னை சர்க்கார் விவசாய, அதிக உணவு உற்பத்தி இலாக்காக்களும், அடையாறு அருண்டேல் முதியோர் கல்விக் கழகமும் கலந்து கொண்டன.

அடையாறு அருண்டேல் பயிற்சி முகாமைச் சேர்ந்த சில பயிற்சியாளர்கள் முதியோர் கல்விப் பாட்டுகளைப் பாட நடவடிக்கைகள் ஆரம்பமாயின. நகர முதியோர் கல்விச் சங்கத் தலைவர் திரு. கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி பேசினார். அவர் சொன்ன தாவது :—

சென்னை நகரம் இன்று செய்வதை ராஜ்யம் முழுதும் நாளை செய்யும். ஆகவே இம்மகாநாடு சென்னையில் கூட்டப்பட்டு இருப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். முதியோர் கல்வியை துணையாகக் கொள்ளாத ஆரம்பக் கல்வி எந்நாளும் பூரண வெற்றியடையாது. முதியோர் கல்வியைப் பரப்புவது மகத்தான வேலை. பல ஸ்தாபனங்கள் இதில் முழு மூச்சாக உழைக்க வேண்டும். இதன் முக்கியத்தை அறிந்தே உத்தர பிரதேசத்தில் இது பற்றிய கட்டாய சேவைக்கு மாணவர்களை திரட்ட முயற்சி நடக்கிறது. இதேமாதிரி இங்கும் செய்வதுப் பற்றி சென்னை சர்க்காரும் யோசித்து வருகிறது. கல்லூரி மாணவர்கள் தங்கள் படிப்பு முடிந்து பட்டங் களைப் பெறுவதற்கும் அல்லது சர்க்கார் சேவையில் இறங்குவதற்கும் முன்னதாக ஆறுமாத காலம் முதி யோர் கல்வி வேலையில் இறங்க வேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஒவ்வொருவரும் இன் னொருவருக்கு கல்வி புகட்ட வேண்டும். "எழுத் தறிவு இல்லாதவர்களுக்கு கல்வி போதிப்பதற்காக படித்தவர்களை ஒன்று திரட்ட வேண்டும்" என்ற இந்தக் கோஷங்கள் சரிவர அமுலாவதற்கு படித்தவர்களை கட்டாய சேவைக்கு திரட்டுவது தான் சரியான வழி. முதியோர் கல்வியும் சமூக வாழ்க்கையும் ஒன்றை ஒன்று அனுசரித்தவையாக இருக்க வேண்டும். சென்னை நகர முதியோர் கல்விச் சங்கத்துக்காக நிதி ஒன்றைத் திரட்ட எல்லோரும் உதவ வேண்டும்.

திரு. டி. ஜே. ஆர். கோபால்
வரவேற்பு உரை

பிரதிநிதிகளையும், ஏனையோரையும் வரவேற் கையில் உபசரணைக் கமிட்டி தலைவர் திரு. டி. ஜே. ஆர். கோபால் கூறியதாவது :—

முதியோர் கல்வி பிரசாரம் இது வரையில் இருந்து வந்ததுபோல் வெறும் காட்டுக் கூச்சலாக இனிமேல் இராது. சுதந்திரத்திற்கு பிறகு முதியோர் கல்வி முயற்சி நாட்டின் வீறு கொண்ட லக்ஷ்யமாகிவிட்டது. இதனால் பெரும் புரட்சி ஏற்படுவது திண்ணம். முதியோர் கல்வி, கட்சி சார்போ, ஜாதி அல்லது வகுப்புசார்போ அற்றது. ஜன நாயக ஆட்சி செழித்தோங்குவதற்கு முதியோர் கல்வி அத்தியாவசியம். பாமர மக்களில் பெரும் பாலோர் எழுத்து வாசனை இல்லாமலும், அறியா மையில் மூழ்கியும் கிடந்தால் நாடு சரியான

துறையில் எப்படி முன்னேற முடியும்? சர்க்கார் இயற்றும் சட்டங்களை மக்கள் சரியாக அறிந்து கொள்ளாவிடில் நிர்வாகம் திறமையாகவோ அல்லது செம்மையாகவோ இருக்க முடியாது. உணவு நெருக்கடி விஷயத்தில் சர்க்கார் பெருந்தவறுகள் இழைத்து விட்டதாகவும், காரியங்களை சரியாக நிர்வாகிக்கவில்லை என்றும், பொது மக்களில் பெரும் பகுதியினர் அபிப்பிராயப் படுகிறார்கள். மக்கள் எழுத்தறிவு பெற்றவர்களாக இருந்தால் விஷயங்களை விளக்கி அவ்வப்போது சர்க்காரின் முக்கிய அதிகாரிகள் வெளியிடும் அறிக்கைகளை அவர்கள் படித்து, உண்மை விஷயங்களை அறிந்து சரியான முடிவுக்கு வரலாம். முதியோர் கல்வியின் அவசியம் இதிலிருந்து தெரிகிறது அல்லவா?

கல்வி பெற வேண்டும் என்பதுதான் மக்களின் கருத்து; இதை மறுப்பதற்கில்லை. ஆனால் கல்வி கற்ற தனிப்பட்டவர்களும் மதிக்கத்தக்க அபிப்பிராயங்களை வெளியிடக் கூடிய முக்கியஸ்தர்களும் முதியோர் கல்வி இயக்கத்தை எதிர்க்கிறார்கள். வருஷா வருஷம் கோடிக்கணக்கான ரூபாய்களை சர்க்கார் செலவிட்டும் பள்ளிக்குப் போகும் வயதான குழந்தைகளில் நூற்றுக்கு முப்பத்தைந்துதான் பள்ளிக்கூடங்களுக்கு போகின்றன என்றும், பாக்கி குழந்தைகள் போகவில்லை என்றும் ஒரு சாரார் குறை கூறுகிறார்கள். ஆகவே, ஆரம்பக் கல்வியை வெற்றிகரமாக்கினால் போதும் என்றும் முதியோர் கல்விக்காக ஒன்றும் செய்ய வேண்டியதில்லை என்றும் மேற்படி அபிப்பிராயம் கூறுவோர் கருதுகிறார்கள். பள்ளிக்கூடங்களுக்கு போகாத 65 சத வீத குழந்தைகளை பள்ளிகளுக்கு போகும்படி செய்ய வேண்டுமானால் பெரியோர்களின் ஒத்துழைப்பும் முயற்சியும் அவசியம் என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். ஆகவே அவர்களை எழுத்தறிவுள்ளவர்களாக செய்தாலன்றி அவர்களுடைய குழந்தைகளின் கல்வி விஷயத்தில் அன்னாரின் ஒத்துழைப்பை நாம் பெறுவதற்கில்லை. எனவே, ஆரம்பக் கல்வி விருத்தியாவதற்கு முதியோர் கல்வி மிகவும் அவசியம்; தவிர மீண்டும் எழுத்தறிவின்மை தலைதூக்காமல் இருக்கவும் அது உதவும்.

முதியோர் கல்வியில் ஈடுபட வேண்டியது ஜனநாயகத்திலுள்ள படித்தவர்கள், அறிவாளிகள் அனைவரின் சமுதாயக் கடமையாகும். ஆதலால் உத்தியோக சார்பற்றவர்கள் தாமாகவே முன்வந்து இந்த வேலையில் இறங்கவேண்டும். ஏராளமான பணத்தை செலவிடுவதால் இந்த பிரச்னையை தீர்க்க முடியாது. எழுத்தறிவில்லாமல் கிடக்கும் ஒவ்வொரு முதியோரையும் எழுத்தறிவுள்ளவர்களாக செய்வது தங்களுடைய கடமை என்பதை கல்வி கற்ற ஒவ்வொருவரும் உணர்வதன் மூலமாகத்தான் பிரச்னையை தீர்க்க முடியும். சர்க்கார் நடவடிக்கையும், உத்தியோக சார்பற்றவர்களின் ஒத்துழைப்பும் ஒன்று சேரவேண்டும். ஜனநாயகத்தில் பொதுமக்களின் ஒத்துழைப்பில்லாமல் எந்த காரியத்தைத்தான் சாதிக்க முடியும்? சர்க்காரின் ஆதரவும், உத்தியோக சார்பற்றவர்களின் பிரசாரமும் ஒன்று சேர்ந்து பொதுமக்களின் ஒத்துழைப்பை எவ்வாறு பெற முடியும் என்பதை தென்னார்காடு ஜில்லா நன்கு நிரூபித்திருக்கிறது. இந்த ஜில்லாவில் கலெக்டரின் மேற்பார்வையில் 700 முதியோர் எழுத்தறிவு கழகங்களை ஜில்லா கமிட்டி நிர்வாகித்து வருகிறது. மக்கள் தாமாகவே முன்வந்து பண உதவி செய்திருக்கிறார்கள். பெரிய அதிகாரிகளும் சிறிய அதிகாரிகளுமாக 390 பேர் வேலையை மேற்பார்வையிட்டு வருகிறார்கள். அந்த ஜில்லா மக்கள் முதியோர் கல்வியில் ஆவல் கொண்டு அதை வரவேற்கிறார்கள். ஆதலால்தான் அங்கு ஜில்லா கமிட்டி பிரமாதமான காரியங்களை சாதிக்கிறது. ஒரு ஜில்லாவின் சாதனை சென்னையிலும் ஏற்பட வேண்டாமா? உண்மை என்னவெனில் எந்த ஜில்லாவிலும் இருப்பதைவிட சென்னை நகரில் அதிக வசதிகள் உண்டு. ஆள் பலத்துக்கோ, பொருள் பலத்துக்கோ குறைவில்லை. முதியோர் கல்வி முயற்சியே இந்த நகரத்தில்தான் உதயமாயிற்று. ஆகவே மற்ற இடங்களுக்கு சென்னை வழிகாட்டியாக இருக்க வேண்டியதுதான் நியாயம். முதியோர் எழுத்தறிவின்மையை மூன்று வருஷங்களில் துடைத்துவிட சென்னை சங்கம் திட்டம் போட்டிருக்கிறது. இதற்கு உங்கள் பேராதரவு அவசியம்.

பம்பாய் மேயரைப்போல் சென்னையிலும் "மேயர் முதியோர் எழுத்தறிவிப்பு நிதி" ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்று நமது மேயருக்கு நான் யோசனை சொல்லுகிறேன்.

மேயர் ஆரம்பித்து வைக்கிறார்

வரவேற்பு கமிட்டி தலைவர் கோரிக்கைக்கிணங்க மகாநாட்டு நடவடிக்கைகளை மேயர் ஆரம்பித்து வைத்தார். அப்பொழுது அவர் பேசியதாவது :—

200 ஆண்டுகளாக இந்தியாவில் ஆதிக்கம் செலுத்தி வந்த அந்நிய ஆட்சி இந்தியருக்கு எழுத்தறிவூட்டத் தவறிவிட்டது. வேண்டுமென்றே அது இவ்வாறு செய்தது. ஆனால் இப்போது நாடு சுதந்திரம் பெற்றுவிட்டதால் இந்நிலைமையை முழுதும் மாற்றிவிடலாம். சுதந்திரம் பெற்றும் மக்கள் சுக வாழ்வு பெறவில்லை. இதற்கு திறமையான தலைவர்களோ, போதிய வசதிகளோ, தேர்ந்த நபர்களோ, சிறந்த தேசபக்தர்களோ, அனுபவம் முதிர்ந்த நிர்வாகிகளோ இல்லாதது காரணமில்லை. நம்முடைய மக்களில் பெரும்பாலோர் வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும்—முக்கியமாக கல்வியிலும் எழுத்தறிவிலும்—மிகவும் பிற்போக்கடைந்தவர்களாக இருக்கிறார்கள்.

இந்தியா கிராமங்கள் நிறைந்த நாடு. எனவே லக்ஷக்கணக்கான கிராம மக்கள் சுபிட்சமாக வாழ்வதில்தான் நாம் நாட்டம் செலுத்த வேண்டும். கிராம புனருத்தாரண வேலையில் முக்கியமானதும், முதன்மையுமானது எழுத்தறிவின்மையை ஒழிப்பதுதான. சீக்கிரத்தில் பொதுத் தேர்தல் நடைபெறப்போகிறது. யாரை தெரிந்தெடுக்கவேண்டும், ஏன் அவர்களை தெரிந்தெடுக்கவேண்டும் என்ற விஷயங்களெல்லாம் ஜனங்களுக்கு சரியான வகையில் தெரியாததற்கு எழுத்தறிவு இல்லாததே காரணம். ஜனநாயகம் சரிவர நடைபெற பாமரமக்கள் எழுத்தறிவு பெற்றவர்களாகவும், சமூகத்துக்கு தாங்கள் செய்ய வேண்டிய கடமைகளை நன்கு உணர்ந்தவர்களாகவும் இருக்கவேண்டும். அமெரிக்காவில் 210 பேர்களில் ஒருவன் படிக்கிறான். ரஷ்யாவில் 290 பேரில் ஒருவன் படிக்கிறான். ஆனல் இந்தியாவிலோ 2,200 பேரில் ஒருவனே படிக்கிறான். இந்நாட்டில் வசதிகளுக்கு எவ்வித குறைவுமில்லை. உணர்வு பெற்று, விழுத்தெழுந்து அனைவரும் ஒன்றுபட்டு கருமத்தில் கண்ணாய் முதியோர் கல்வியைப் பரப்ப முற்படுவார்களானல் நாட்டு முன்னேற்ற வேலை வெகு துரிதமாக நிறைவேறும்.

முதியோர் கல்வியை பரப்புவதில் ராஜ்ய சர்க்கார் இப்பொழுது தீவிர கவனம் செலுத்தி வருகிறார்கள். சர்க்காரின் திட்டம் தயாராகி வேலையும் ஊக்கமாக நடந்து வருகிறது. சென்ற இரண்டு வருஷங்களாக இவ்வேலையில் புதிய உத்வேகத்தை காண்கிறோம். இயக்கத்துக்கு உதவ மத்திய சர்க்கார் மான்யங்கள் கொடுக்கிறார்கள். எனினும் புனருத்தாரண வேலைகளுக்கு நாம் சாக்காரின் உதவியை எவ்வளவுதான் எதிர்பார்க்கமுடியும்? நாமே நமக்கு உதவி செய்து கொள்ளும் பொறுப்பை உணரவேண்டிய காலம் வந்துவிட்டது.

கட்டாய ஆரம்பக் கல்விக்கு துணையாக இருந்து அதன் வளர்ச்சிக்கு உதவக்கூடியது முதியோர் எழுத்தறிவிப்பு இயக்கமே. முதியோர் எழுத்தறிவிப்பை கட்டாயமாக்கினல் அன்றி, கட்டாய ஆரம்பக் கல்வியை அமுல் நடத்த சர்க்காரோ, அல்லது வேறு எந்த ஸ்தாபனமோ செய்யும் முயற்சிகளெல்லாம் நிச்சயமாக வீணாகும்; ஒருக்கால் பண விரயமும் ஏற்படலாம். கட்டாய ஆரம்பக் கல்வியை அமுல் நடத்தக்கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆனல் அக்கல்வியுடன் கட்டாய முதியோர் கல்வியையும் சேர்த்துக் கொண்டால்தான் உத்தேச பலன் கைகூடும் என்றுதான் சொல்கிறேன். முதியோர்களுக்கு சரியான வகையில் நாம் கல்வி புகட்டினல் அவர்களுக்கு படிப்பதில் ஆர்வமும், ஞானத்தை பெருக்கிக்கொள்வதில் நாட்டமும், முன்னேற்றத்தில் திடமான நம்பிக்கையும், எதிர்காலத்தில் தீவிர கணணேட்டமும், வாழ்க்கையைப்பற்றி புத்தறிவும் பிறக்கும். விவசாய நாடாகிய இந்தியாவுக்கு இதுதான் தற்போதைய தேவை. முதியோர் கல்வி இயக்கம் நாட்டில் வேரூன்ற ஆயிரக் கணக்கான ஆசிரியர்கள் தேவை. கட்டாய ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கே ஆசிரியர் கிடைக்காமல் இருக்கையில் முதியோர் கல்வி இயக்கத்துக்கு எங்கிருந்து கிடைக்கப்போகிறார்கள்? எனவே ஆசிரியர்கள் கிடைக்கும்வரையில் காத்திராமல் ஒவ்வொருவரும் இயக்கத்தில் பங்கு கொள்ள வேண்டும்.

முதியோர் எழுத்தறிவிப்பு வெற்றி கிட்டுவதுடன் நீங்கள் திருப்தியடைந்துவிடக்கூடாது. முதியோர்களிடையே கல்வி பெருகவேண்டும்; கலாசாரத்தில் தங்களுக்குரிய ஸ்தானத்தை அவர்கள் வகிக்க வேண்டும். இவ்வளவு நடந்தால்தான் சமூகத்தில் ஒற்றுமை மேலோங்கி, நாட்டில் கைத்தொழில் உற்பத்தி அதிகரித்து, அரசியல் துறையில் திறமை துலங்கும்.

முதியோர் கல்வியை பரப்பும் ஆசிரியர்களுக்கு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முதியோர்களின் மனேதத்துவத்தை நீங்கள் நன்கு அறியவேண்டும். உங்களிடம் வருபவர்களில் பெரும்பாலோர் தொழிலாளர்களாகவும், ஏழைகளாகவும் தான் இருப்பார்கள். தவிர நாள்பூராவும் உழைத்து விட்டு வருவார்கள். ஆகவே அவர்களுடைய மனேதத்துவ நிலைக்கு ஏற்றவாறு அவர்களுக்கு கல்வி புகட்டவேண்டும்.

மகாநாட்டின் தலைவராக திரு. எஸ். சச்சிதானந்தம் பிள்ளையின் பெயரை திரு. எஸ். எஸ். அவதானியார் பிரேரித்தார்; திரு. கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியார் ஆமோதித்தார்.

திரு. மா. பொ. சிவஞானம்

முதியோர் கல்வி கண்காட்சியை திரு. மா. பொ. சிவஞான கிராமணியார் திறந்து வைத்து பேசுகையில்: "எந்த நாட்டிலாவது முதியோர் கல்வி ஆரம்பமாகியிருக்கிறது என்றால் அது அந்த நாட்டின் முன்னேற்றதிற்குத்தான்" என்றார்.

"எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும், இந்த முதியோர் கல்வியை ஆதரிக்காமல் ஒழிக்கவேண்டும் என்று நினைத்தால், அது ஒழிந்துபோகும். அதை நாம் ஒழிக்கவேண்டும், ஏன்? இன்றைய தினம் முதியோர் கல்வி ஸ்தாபனம் அரசியல் கட்சி அல்ல, இதில் ஜாதி, மதம் என்ற பேதம் கிடையாது. பணக்காரர்கள் முதல் பாமர மக்கள் வரைக்கும் தொண்டு புரியும் ஓர் சமூகத் தொண்டு ஸ்தாபனம். இது எல்லா அரசியல் கட்சிக்கும் அப்பாற்பட்டது. சுதந்திரம் வாங்குவது சுலபம், ஆனல் முதியோர் கல்வி அதைவிட கடினம். ஆகையால் இந்த சமூக ஸ்தாபனத்திற்கு ஒவ்வொரு இந்தியனும், தமிழனும் ஆதரவளிக்கவேண்டுமென" கேட்டுக்கொண்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

இன்றைய தினம், அதாவது 100 முதியோர் கல்வி நடத்தும் இடத்தில் 97 பள்ளிகள் ஆதரவில்லாமல் மூடப்பட்டுவிட்டால், மீதியுள்ள மூன்று பள்ளிக்கூடங்களை நாம் விடாமல் நடத்தவேண்டும். 100-ல் மூன்று பள்ளிகளில் படிக்கும் முதியோர்களின் அறியாமையை போக்குவது நம் பாரத நாட்டில் கல்வி அறிவு இல்லாதவருக்கு செய்யும் ஓர் சமூகத் தொண்டு' என்றார்.

திரு. சிவஞானம் அவர்கள் திரு. ஜி. ஹரிசர்வோத்தமராவை குறிப்பிட்டு சொல்லுகையில்: ஹரிசர்வோத்தம ராவ் அவர்கள் பழய தேசபக்தர். நாட்டின் சுதந்தரத்தின் பொருட்டு பலமுறை சிறை சென்றிருக்கும் ஒரு பெரிய மகான்; இந்த தள்ளாத வயதில் பதவி மோகம் கொள்ளாமல் கடந்த பல வருஷங்களாக முதியோர் கல்வி ஸ்தாபனத்திற்கு உழைத்து வருகிறார்''.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"நமது சுதந்திர சர்க்கார் இந்த முதியோர் கல்வி ஸ்தாபனத்திற்கு அதிக ஆதரவு அளிக்கவேண்டும். இன்று தொழில் நிலயங்களில் வேலை செய்யும், ஏழைகளின் அறியாமையை போக்க, தொழில் நிலயங்களில், அவர்களுக்கு படிப்பு சொல்லி தருவதற்கு பாடசாலை அமைக்கவேண்டும். வாரத்தில் ஒரு நாள் படிப்பு வாசனை இல்லாமல் இருக்கும் அந்த உழைப்பாளிகளுக்கு படிப்பு சொல்லிக் கொடுக்கும்படி சர்க்கார் உதவி புரியவேண்டும். அதனுடனில்லாமல் அதற்கு 'ஷாப் ஆக்ட்' இன்ஸ்பெக்டர்கள் (Shop Act Inspector) போல் தனி இன்ஸ்பெக்டர்கள் போட்டு, அவர்களுக்கு பரிக்ஷை வைத்து, அதில் முதலாவதாக வருபவருக்கு தகுந்த பரிசுகள், சன்மானங்கள் வழங்கினால், அந்த உழைப்பாளிகளுக்கு உற்சாகம் மேலிட்டு நன்றாக படிப்பார்கள். மேலும் முதியோர் கல்வியினால் உத்யோக உயர்வுக்கும் வழி உண்டு. உண்மையாக தன் உணவில் பிறருக்கு பங்கு அளித்து, அதேபோல் தன் கல்வியையும் பிறருக்கு போதிக்கின்ற பிறர் நல உதவிக்காரன்தான் உண்மையான, தேசபக்தன், தமிழன். ஆகையால் நீங்கள் கட்சி பேதம் காட்டாமல் சிறந்த சமூகத் தொண்டு செய்யும் ஸ்தாபனமாகிய இந்த முதியோர் கல்வி ஸ்தாபனத்திற்கு ஆதரவுகொடுத்து உதவுங்கள்''.

தலைவர் உரை

பெருத்த ஆரவாரத்துக்கிடையே திரு. சச்சிதானந்தம் பிள்ளை தலைமைப் பதவியை வகித்து முதியோர் கல்வி இயக்கத்தில் தீவிர பங்கு எடுத்துக்கொள்ள தமக்கு மீண்டும் சந்தர்ப்பம் கிடைத்ததற்காக வந்தனம் தெரிவித்துவிட்டு பேசியதாவது:—

சென்னைச் சங்கம் சென்ற ஜனவரி மாதத்தில் தான் துவக்கப்பட்டதாயினும் உருவமான வேலையை வகுக்க இம்மகாநாட்டுக்கு அது ஏற்பாடு செய்தது போற்றுதற்குரியதாகும். எல்லா ஊழியர்கள், அன்பர்கள் ஆகியோரின் பூர்ண ஒத்துழைப்புடன், சரியாக அமுல் நடத்தக் கூடிய திட்டம் ஒன்று தயாரிக்கப்படுமென்றும் அதன் மூலமாக சுற்றுப்புற பிரதேசங்களுக் கெல்லாம் சென்னை வழிகாட்டியாக விளங்குமென்றும் நான் நம்புகிறேன். 1947-ம் ஆண்டு வரையில் முதியோர் கல்வி இயக்கத்துக்கு சர்க்காரிடமிருந்தோ, மற்றும் செல்வாக்கு பெற்றவர்களிடமிருந்தோ அதிக ஆதரவு கிடைக்காதிருந்தது என்பது உண்மையே. ஆனால் முதியோர் கல்வி விஷயத்தில் பெருமைபடக்கூடிய வேலையை அவைகள் செய்யவில்லை, முதியோர் எழுத்தறிவிப்பிலும், சமூகக் கல்வியிலும், சர்க்காருக்கும் பொதுமக்களுக்கும் போதிய அக்கரை இல்லாமல் இருந்ததே இதற்கு காரணம்.

ஆனால் சுதந்திரம் எய்தியபின் புதிய விழிப்பும், புதிய மனோபாவமும் பிறந்து விட்டன. மத்திய சர்க்காரும் சரி, ராஜ்ய சர்க்காரும் சரி இயக்கத்தில் சரியான கவனம் செலுத்தத் தொடங்கிவிட்டனர். 1948—1949-ம் வருஷத்தில் சர்க்கார் செலவழித்த தொகை ரூ. 63,000; 1949-50-ல் இந்தத் தொகை ரூ. 1.39 லக்ஷமாக்கப்பட்டது. 1950-51-ல் வரவு செலவு திட்டத்தில் 14 லக்ஷம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கையைப் பார்ப்போம். 1949-50-ல் 481 முதியோர் கல்விப் பள்ளிகள் இருந்தன; இப்பொழுது 1658 இருக்கின்றன; இவற்றில் 24000 பேர் கல்வி பயின்று வருகிறார்கள். 1950-51-ல் மொத்தம் 3010 பேர்களுக்கு கல்வி புகட்ட வேண்டும் என்பது நோக்கம்.

முதியோர் கல்வியும், முதியோர் எழுத்தறிவிப்பும் சாதாரண மனிதனின் அறியாமையை அகற்றவும், அவன் உள்ளே அடங்கிக்கிடக்கும், உறங்கிக்கிடக்கும், சக்திகளை தட்டி எழுப்பவும், நவீன சமூக வாழ்வில் தன் பங்கை வெற்றிகரமாக நடத்தவும், ஆரம்பக் கல்வியைப்போல் எவ்வளவு அவசியமானவை என்பதை விரித்து உரைக்க வேண்டிய அவசியமில்லை. முதியோர் ஓட்டுரிமையை அடிப்படையாகக் கொண்டுதான் தற்போதைய ஜனநாயகம் அமைந்திருக்கிறது. தவிர நம் மாகாணம் சம்பந்தப்பட்ட மட்டில் ஒரு விசேஷத்தை நாம் மனதில் கொள்ள வேண்டும். அதாவது இன்று மதுவிலக்கு அமுலில் இருக்கிறது; இதன் காரணமாக உபயோகமான காரியங்களில் கவனம் செலுத்த மக்களுக்கு அவகாசம் இருக்கிறது. இந்த சாதகமான சூழ்நிலை கவனத்துக் குரியது.

சிறிது காலத்துக்கு முன்பு முதியோர் கல்வி அதிகாரி ஒருவர் ரேடியோ பிரசங்கம் ஒன்றை நிகழ்த்தினார். இம்மாகாணத்திலுள்ள ஐந்து கோடியே ஐம்பது லக்ஷம் ஜனங்களில் ஏறக்குறைய மூன்றில் இரண்டு பங்கினர் எழுத்தறிவற்றவர்கள் என்று அவர் குறிப்பிட்டார். சென்னை நகரில் உள்ள எழுத்து வாசனை இல்லாதவர்களின் சரியான தொகையை என்னால் பெறமுடியவில்லை. சென்னையின் மொத்த ஜனத்தொகை 15 லக்ஷம் என்று தெரிகிறது. இதில் சுமார் 10 லக்ஷம் பேர்கள் முதியோர்கள் என்றும், இவர்களில் 4 லக்ஷம் பேர் எழுத்தறிவற்றவர்கள் அல்லது ஏதோ சிறிது எழுத்தறிவுள்ளவர்கள் என்றும் நகர முதியோர் கல்விச் சங்கம் கணக்கெடுத்திருக்கிறது. இதில் சுமார் லக்ஷம் பேர்கள்தான் முதியோர் எழுத்தறிவிப்பு ஸ்தலங்களில் பயிற்சி பெறுவதாகக் கொள்ளலாம். இந்த இயக்கத்தில் 1942-ம் வருஷத்திலேயே கார்ப்பரேஷன் சிரத்தை காட்டத் தொடங்கிற்று. 1946-ல் ஏழைகள் வசிக்கும் இடங்களில் எழுத்தறிவிப்பு ஸ்தாபனங்களை அது ஆரம்பித்தது. கார்ப்பரேஷன் நடத்தும் இத்தகைய ஸ்தாபனங்கள் இப்போது 10 இருக்கின்றன; தவிர தனிப்பட்ட ஸ்தாபனங்களால் நடத்தப்பட்டு கார்ப்பரேஷனில் மான்யத்தைப் பெறும் ஸ்தலங்கள் 11 இருக்கின்றன. இந்த ஸ்தாபனங்களுக்கான பயிற்சியாளர்களை தயாரிப்பதற்காக 1947 அக்டோபரில் ஒரு போதனா முறை ஆரம்பிக்கப்பட்டது. 1949-ல் 10 புதிய ஸ்தாபனங்கள் தோற்றுவிக்கப்பட்டன; இவை பெரும்பாலும் ஏழைகள் வசிக்கும் இடங்களிலேயே அமைந்தன. 1949-50-ல் முதியோர் கல்விக்காக கார்ப்பரேஷன் ரூ. 7,980 செலவழித்தது.

1-10-'47-ல் மொத்தம் 703 பேர் பயிற்சி பெற்றார்கள்; 1-11-'48-ல் இந்தத் தொகை 894 ஆயிற்று. ஆனால் 1949-ல் 627 ஆகக் குறைந்து விட்டது. நகரக் கல்லூரிகளில் ஒரு சில மாணவர்கள் கல்வி போதிக்க முயற்சித்துவரும் முதியோர்களையும் சேர்த்துக்கொண்டால்கூட மொத்தம் 1000 பேர்களுக்கு மேல் இருப்பதற்கில்லை. இது திருப்திகரமான நிலை அல்ல. இந்த பிற்போக்கின் காரணத்தை சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் அறிந்து சரியான திட்டத்தை வகுக்க வேண்டும்.

"தாம் கல்வி விளக்கம் பெற்றால்தான் தம்முடைய வாழ்க்கை அதிக சந்துஷ்டியுடனும், சுபிட்சத்துடனும் இருக்கும் என்பதை ஒவ்வொரு தொழிலாளியும் உறுதியாக நம்பினாலன்றி எழுத்தறிவிப்பு வெற்றி அளிக்காது என்பதே என்னுடைய தேர்ந்த அனுபவம். மனிதர்கள் தாங்கள் எதைப் பார்க்கிறார்களோ அதை நம்பிவிடுகிறார்கள்." பம்பாயில் நெசவாலைத் தொழிலாளர்கள் இடையே முதியோர் கல்வியைப் பரப்ப முயன்ற திரு. எஸ். கே. ஷிரோத்கர் என்பாரின் கருத்துக்கள் இவை. இயக்கத்தில் முனைப்புடைய எல்லோரும் உள்ளத்தில் கொள்ள வேண்டிய கருத்துக்கள். சிறந்தப் பலனைப்பெற என்ன செய்யவேண்டும் என்பதை இனி நாம் கவனிப்போம். (1) கல்வியிலும், எழுத்தறிவிலும் முதியோர் ஒவ்வொருவருக்கும் சிரத்தை பிறக்கும்படி இனிய மொழிகளால் அவர்களைத் தயார் படுத்த வேண்டும். (2) போதிய அளவு விளையாட்டுக்களும் தமாஷாக்களும் இருக்கவேண்டும் (3) நம்முடைய சர்க்காரின் ஜனநாயக அம்சத்தை அதிகமாக மாற்றாமல் சந்தர்ப்பம் வரும்போது ஓட்டுரிமையை புனர் நிர்ணயம் செய்யும் சமயத்தில் எழுத்தறிவு பெற்றவர்களுக்கு ஓட்டுரிமை உண்டு என்று ஏற்பாடு செய்ய வேண்டும். இப்படிச் செய்தால் எழுத்தறிவில்லாத லக்ஷக்கணக்கானவர்கள் எழுத்தறிவு பெறுவதற்கு தூண்டுதல் ஏற்படும். (4) சம்பள உயர்வு, போனஸ், இவற்றைக் கொடுப்பதில் முதியோர் கல்வி வகுப்புகளில் தவறாமல் கலந்துகொண்டதை ஒரு முக்கியாம்சமாக முதலாளிகள் வைத்துக் கொள்ள வேண்டும். இவ்வகையில் சர்க்காரும் கார்ப்பரேஷனும் இதர ஸ்தல ஸ்தாபனங்களும் வழிகாட்டலாம் (5) முதியோர் எழுத்தறிவிப்பையும், சமூகக் கல்வியையும் பரப்ப தொழிலாளர் க்ஷேமாபிவிருத்தி அதிகாரிகளை உபயோகித்துக் கொள்ளலாம். ஸ்திரீ தொழிலாளர்களிடையே உழைக்க பிரத்யேக ஸ்திரீ க்ஷேமாபிவிருத்தி அதிகாரிகளை வைத்துக் கொள்ளலாம். எழுத்தறிவிப்பு ஸ்தலங்களில் பூரா நேரமும் வேலை செய்பவர்களை நியமிக்கலாம். (6) குறைந்தபக்ஷம் எஸ்.எஸ்.எல்.ஸி. யோக்யதாம்சத்தை உடைய பிரத்யேக பயிற்சி பெற்ற ஆசிரியர்களையே வேலைக்கு வைத்துக்கொள்ளலாம். (7) ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல், அவர்களுடைய வேலையை மேற்பார்த்தல், அவர்களை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றுதல், இவை சம்பந்தமான அதிகாரிகளை சர்க்காரே வைத்துக் கொள்ளலாம். (8) எழுத்தறிவின்மையை போக்கும் வேலையை கல்வி இலாகா மட்டுமன்றி எல்லா இலாக்காக்களும் கவனிக்கும்படி வகை காண வேண்டும். தனிப்பட்ட ஸ்தாபனங்கள் இவ்விஷயத்தில் உதவலாம். (9) முதியோர் கல்வி ஸ்தலத்தில் மூன்று வருஷகாலம் பயிற்சிப்பெற வேண்டும் என்ற தற்போதைய ஏற்பாட்டை ஒரு வருஷம் அல்லது ஒன்றரை வருஷம் என்று குறைத்துக்கொள்ளலாம். (10) ஸ்தலங்களில் ஆசிரியராக சேவை புரிவதற்கான பயிற்சி காலத்தில் எஸ்.எஸ்.எல்.ஸி. தேறியவர்களுக்கு சில வாரங்கள் குறைக்கலாம். (11) சென்னையில் குறைந்த ஊதியத்தை இருபது ரூபாயாக உயர்த்தலாம்.

சென்னை நகருக்காக முதியோர் கல்வி சங்கத்தார் தயாரித்திருக்கும் திட்டத்தை எல்லோரும் நன்கு பரிசீலித்து தேர்ந்த அபிப்பிராயத்தை வெளியிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொள்ளாச்சி திரு. சுப்பையன் சொற்பொழிவு

பொள்ளாச்சி திரு. சுப்பய்யன் அவர்கள் சிறந்த தொரு சொற்பொழிவாற்றினர். அவர் பேசுகையில்:

இன்று முதியோர் கல்வி ஸ்தாபனத்தை நன்ருக பரப்ப வேண்டுமாஞல் திரு. டி. ஜே. ஆர். கோபால் அவர்களின் தலைமையின்கீழ் ஓர் புரட்சிகரமான நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான் இந்த முதியோர் கல்வி ஸ்தாபனம் சிறந்ததாக ஆகும்.

இன்றயதினம் நமது சர்க்கார் இதற்கு பூரண ஆதரவு கொடுக்காமலிருக்க காரணம் என்ன வென்ருல், எல்லோரும் படித்து அறிவாளிகளாக ஆகி எங்கே தங்கள் தவறை எடுத்துக் காண்பிப்பார்களோ என்ற அச்சம்தான் என்று நான் நினைக்கிறேன். இன்று சுதந்திரமடைந்த மற்ற தேசங்கள் எல்லாம் முதன் முதலில் தங்கள் நாட்டில் உள்ள அறியாமையை போக்க பாடுபடுகிருர்கள். அதே போல் இன்று நமது சர்க்கார் செய்கிறதா? அதனல் புரட்சிகரம் செய்து நமது சர்க்காரை இதற்காக பல பள்ளிகளை ஏற்படுத்தி அதற்கும் ஒரு மந்திரியைப் போட்டு அதை சிறந்த ஸ்தாபனமாக ஆக்கி நம் நாட்டு சகோதர, சகோதரிகளின் அறியாமையை போக்கப் பாடுபடவேண்டும் என்றும் தங்கள் ஊரான பொள்ளாச்சியில் 'முதியோர் கல்வி' கழகங்களுடைய வெற்றியை எடுத்துரைத்தார்.

திரு. பி. எஸ். சுப்பரத்னம் வந்தனேபசாரம் கூறினர்.

"எழுத்தறிவற்றவரின் துயரங்கள்" என்ற நாடகத்தை அடையாறு அருண்டேல் முதியோர் கல்வி முகாம் பயிற்சியாளர்கள் நடத்திக்காட்டினர். இந் நாடகம் இரண்டு பகுதிகளைக் கொண்டதாக இருந்தது. எழுத்தறிவில்லாத கடன்காரரை கிராம சாவுகாரர்கள் எப்படி ஏமாற்றிப் பிழைக்கிருர்கள் என்பது ஒருபகுதி; ஒரு நகரத்துக்குப் புதிதாக வந்த ஒரு கிராம ஸ்திரீ நகரில் தாம் கண்ட விநோதங்களை விவரிப்பது மற்றொரு பகுதி.

மகாநாட்டின் 2-வது நாள் நடவடிக்கைகள்

மகாநாட்டிற்காக வந்திருந்த பிரதிநிதிகள் அனைவரும் மறுதினம் விஷயாலோசனை கமிட்டியாக ராஜாஜி ஹாலில் கூடினர். திரு. எஸ். சச்சிதாநந்தம் பிள்ளை தலைமை வகித்தார். திருவாளர்கள் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியும், ஹரிஸர்வோத்தம ராவும் பிரசன்னமாயிருந்தனர். வரவேற்புக் கமிட்டியார் தயாரித்திருந்த தீர்மானங்கள் விவாதிக்கப்பட்டு இறுதியாக முடிவு செய்யப்பட்டன.

சென்னை நகரம் சம்பந்தமாக சங்கம் தயாரித்திருந்த திட்டம் நன்ருக விவாதிக்கப்பட்டது.

திரு. எஸ். ஐராவதம் அவர்கள் பிரசங்கம்

முதல் சென்னை நகர முதியோர் கல்வி மகாநாட்டு பிரசார அதிகாரி, திரு. எஸ். ஐராவதம் வேலைத்திட்டத்தை விளக்குகையில் கூறியதாவது :—

உத்தியோக சார்பற்றவர்கள் தாமாகவே முன்வந்து உழைப்பதன் மூலமாகவே முக்கியமாக முதியோர் எழுத்தறிவிப்பு இயக்கம் வெற்றிபெறவேண்டும் என்று இந்தியாவின் கல்வி மந்திரி மௌலானு அபுல் கலாம் ஆசாத் நிர்ணயித்துள்ள அடிப்படை கொள்கையைத் தழுவியே பூராத் திட்டமும் உருவாக்கப்பட்டது. இந்த நோக்கம் மிகவும் பரந்த தன்மையுடையது; தேசீயத் தன்மை மிகுந்தது. மேற்படி நோக்கம் நிறைவேற வேண்டுமாஞல் எழுத்தறிவில்லாத முதியோர்கள் எழுதவும், படிக்கவும் கற்றுக்கொள்ள முன்வரவேண்டும்; தங்களுக்கு கிடைக்கும் வசதிகளை பயன்படுத்திக்கொள்ள அவர்கள் தயாராக இருக்கவேண்டும். பாமர மக்கள் எழுத்தறிவில்லாமல் இருப்பது சமூக அமைதிக்கு அபாயமானது என்பதையும், தேசிய முன்னேற்றத்திற்கு தடையானது என்பதையும் படித்த வகுப்பினர் உணர வேண்டும். தங்களுடைய சொந்த நன்மையை உத்தேசித்தே முதியோர் எழுத்தறிவையும் முதியோர் சமூகக் கல்வியையும் பரப்பவேண்டியது தங்களுடைய கடமை என்பதை உணர்ந்து அவர்கள் நடக்க வேண்டும். மக்களுக்காக மக்களால் நடக்கும் மக்களின் இயக்கமாக அது இருக்க வேண்டும். ராஜாங்க உதவி அவசியம்தான்; ஆயினும் மக்களின் முயற்சி எந்த அளவுக்கு உருக்கொள்கிறதோ அந்த அளவுக்குத்தான் ராஜாங்க முயற்சி கிடைக்கும்.

ஆகவே முதியோர் கல்வி ராஜாங்கத்தின் பொறுப்புத்தான் என்ற கூற்று அர்த்தமற்றதுதான். தேசிய முன்னேற்றத்துக்கு முதியோர் கல்வி அவசியமானது என்ற உறுதிப்பாடுடையவர்கள் திக்கற்றவர்களாக தவிக்கமாட்டார்கள்; உதவிக்காக சர்க்காரையோ கார்பரேஷன் போன்ற ஸ்தாபனங்களையோ எதிர்பார்க்கமாட்டார்கள். சென்னை நகரிலுள்ள 50 முனிசிபல் டிவிஷன்களில் ஒவ்வொரு டிவிஷனுக்கும் 100 பேர் வீதம் மொத்தம் 5,000 மெம்பர்களை நகர முதியோர் கல்விச் சங்கம் சேர்த்து, பிரதி டிவிஷனிலும் கமிட்டிகளை அமைத்து மத்திய கமிட்டியை நிறுவி வேலைசெய்ய முற்பட்டால் சர்க்கார் உள்பட எல்லா ஸ்தாபனங்களும் உதவ போட்டிபோட்டுக் கொண்டு முன்வரும். பொது மக்களிடையே இத்தகைய உத்ஸாகத்தையும், ஆர்வத்தையும் உண்டு பண்ணவேண்டும் என்பதுதான் சங்கத்தின் அவா. இந்த வேலை எவ்விதத்திலும் கடினமானதல்ல. நகரில் வசதிகளுக்கோ குறைவில்லை. குறைந்த வசதிகளையும், நிறைந்த இடுக்கண்களையும் உடைய தென்னுற்காடு ஜில்லாவில் இரண்டே வருஷத்தில் பெருத்த மாறுதல் ஏற்பட்டிருக்கையில் தலைநகரம் மட்டும் பின் தங்கலாமா?

தாய்மொழியில் எழுத்தறிவிப்பதே நோக்கம். சரியான வகையில் கற்றுக்கொண்டால் இரண்டு மூன்று மாதங்களில் சிறுசிறு புத்தகங்களைப் படிக்க முடியும். எழுதப் படிக்கத் தெரிந்துகொள்வதால் ஏற்படும் அனுகூலங்களை எழுத்தறிவில்லாதவர் களுக்கு விளக்கவேண்டியது ஆசிரியர்களின் கடமை. வாரந்தோறும் ஒவ்வொரு கோஷ்டிக்கு கல்வி போதிக்கலாம்; பல இடங்களிலும் வகுப்புகளை ஆரம் பிக்கலாம். முன்னிருந்து வழிகாட்டுவதும், திட் டத்துடன் கூடிய நடவடிக்கையும்தான் தேவை. சங்கம் தன்னுடைய பங்கை செய்ய தயாராய் இருக் கிறது. அவசியமான புள்ளி விவரங்களை டிவிஷன் மெம்பர்கள் திரட்டுவர். இந்த வேலைக்கு வீட்டுக்கு வீடு செல்வது அவசியமாகிறது. இதில் உயர் பதவி யில் இருப்பவர்களும், செல்வாக்குள்ளவர்களும், கலந் துக் கொண்டால் இயக்கம் புதிய உத்வேகம் பெறும். முதியோர் கல்விக்காக செலவழிக்கும் பணம் வியர்த்தமென்றும், அதை ஆரம்பக் கல்விக்காக செல வழிக்கலாம் என்றும், பொறுப்புவாய்ந்த பதவியி லுள்ளவர்கள் சொல்வது விந்தையாக இருக்கிறது. இந்த கூற்றை திரு. டி. ஜே. ஆர். கோபால் தமது பிரசங்கத்தில் கண்டித்திருக்கிறார். மேற்படி கருத்தை வெளியிடுவோர்களை ஜனநாயகத்தில் நம்பிக்கை இல் லாதவர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். முதி யோர்கள் இன்னும் எழுத்துவாசனை இல்லாமல் இருப்பதுதான் ஆரம்பக் கல்வி போதிய அளவுக்கு முன்னேறாததற்கு காரணம்.

இந்திய சர்க்காரின் அங்கீகாரத்தையும் ஆதரவை யும் கொண்டும் சென்னை சர்க்காரின் உதவியையும் ஒத்துழைப்பையும் பெற்றும் தென்னிந்திய முதி யோர் கல்விச் சங்க ஆதரவில் அடையாறில் 1951 ஏப்ரலில் நடந்த முதல் தென்னிந்திய முதியோர் கல்வி அரங்கின் சம்பந்தமாக ஜெமினி ஸ்டுடியோ தயாரித்திருந்த படம் புரசைவாக்கம் ராக்ஸி தியேட் டரில் காட்டப்பட்டது. இதை மகாநாட்டுப் பிரதி நிதிகளும், பல தலைவர்களும் கண்டு களித்தனர். படத்தின் காட்சிகளை அவ்வப்போது திரு. ஐராவதம் விளக்கிவந்தது பெரிதும் போற்றத்தக்கதாக இருந் தது. முதியோர் கல்வி இயக்கத்துக்கு ஜெமினி ஸ்டுடியோவும், அதன் சொந்தக்காரரான திரு. எஸ். எஸ். வாஸனும் மேற்படி படம் மூலம் புரிந்த அரிய சேவையை அனைவரும் பாராட்டினர்.

மகாநாட்டின் பெண்கள் பகுதி

மகாநாட்டின் பெண்கள் பகுதி திருமதி ஆர். ராதா தலைமையில் நடந்தது. முதியோர் கல்வி பெண்க ளுக்குத்தான் மிகவும் அவசியமென்பதை திருமதி ராதா எடுத்துக்காட்டினார். பெண்களை கைதூக்கி விடக்கூடியது கல்விதான் என்றும், தங்களில் மிகவும் துர்பாக்கிய நிலையிலுள்ளவர்களுக்கு உதவ வேண்டியது கல்வி கற்ற பெண்களின் கடமை என்றும், சென்னை நகரில் செல்வாக்கும் செல்வ மும் படைத்த பெண்கள் பலருக்கு இந்த இயக்கத் துக்கு உதவக்கூடிய அளவுக்கு அவகாசம் இருப்ப தாகவும் அவர் கூறினார்.

கோபாலபுரம் பெண்கள் உயர்தரப்பள்ளி திருமதி சுசிலா, அடையாறு பெஸன்ட் ஞாபகார்த்த உயர் தரப்பள்ளி திருமதி கே. புவனேஸ்வரி, லேடி விலிங்டன் பயிற்சிக் கல்லூரி திருமதி ராஜரத்னம் முதலியோர் பேசுகையில் பிரசாரத்தின் அவசி யத்தை வற்புறுத்தினர்.

தீர்மானங்கள்

மகாநாட்டில் பொள்ளாச்சி திரு. பி. எஸ். சுப்பையா, திரு. ஜி. ஹரிஸர்வோத்தம ராவ், மிஸ்டர் எல். வி. ரிச்சேட், திரு. சிவஞானம், பண்டித நடேசன், திரு. டி. ஜே. ஆர். கோபால், திரு. முருகேச பாகவதர் ஆகியோர் பேசினர்.

பின்வரும் தீர்மானங்களை ஒவ்வொன்றாக படிக்க, அவற்றை அக்கிராசனர் ஓட்டுக்குவிட அனைத்தும் ஏகமனதாக நிறைவேறின.

(1) உத்ஸாக மூட்டும் வகையில் கனம் மௌலானா அபுல் கலாம் ஆசாத் செய்தி அனுப்பியதற்காக மகாநாடு தன்னுடைய வந்தனத்தை அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறது; எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் முதியோர் எழுத்தறிவிப்பு நோக்கம் பூர்த்தியாக சென்னை நகர முதியோர் கல்விச் சங்கம் தன்னால் இயன்றதைச் செய்யும் என்று அவருக்கு உறுதி கூறுகிறது.

(2) அறியாமையை அகற்றுவது கல்வி இலாகா அதிகாரிகளின் வேலை மட்டும் அல்லாமல் எல்லா இலாக்காக்களும் அதில் சிரத்தைக்கொள்ள வேண்டும் என்ற 1950-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 3-ந் தேதிய 2150-வது சர்க்கார் உத்திரவை தென்னாற்காடு ஜில்லாவில் நடப்பதுபோல் ராஜ்யத்தின் ஒவ்வொரு ஜில்லாவிலும் அமுல் நடத்தும்படி மகாநாடு சர்க் காரைக் கேட்டுக்கொள்கிறது.

(3) நகரில் முதியோர் எழுத்தறிவின்மையை ஒழிக்க சென்னை நகர முதியோர் கல்விச் சங்கம் தயாரித்துள்ள திட்டத்தின் நோக்கத்தை இம்மகா நாடு பொதுவாக அங்கீகரிக்கிறது; திட்டத்தை ஆராய்ந்து அபிவிருத்தி செய்யவும் இறுதியாக முடிவு செய்யவும் நிறைவேற்றவும் பின்வருபவர்கள் அடங்கிய ஒரு சங்க கமிட்டியை நியமிக்கிறது; இக்கமிட்டிக்கு மேற்கொண்டு நபர்களை நியமிக்க அக்கிராசனருக்கு அதிகாரம் உண்டு.

திரு. எஸ். சச்சிதானந்தம் பிள்ளை, திருமதி ஆர். ராதா, பண்டித நடேசன், திரு. எஸ். ஐராவதம்,

திரு. பி. நீலகண்டன், திரு. எ. எம். சந்தியா, திரு. பி. எஸ். கிருஷ்ணஸ்வாமி, தமிழ்நாடு முதியோர் கல்வி அதிகாரி திரு. வெங்கட்டராமன், திரு. டி. ஜே. ஆர். கோபால், திரு. வி. வீரராகவன், திரு. எ. திரு. ஞானசம்மந்தம் (கூட்டுபவர்) பின்வருபவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள் :— கார்ப்பரேஷன் கமிஷனர், திரு. மீனாக்ஷி சுந்தரம், பேராசிரியர் ஸ்வாமிநாதன், திரு. கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி, திரு. ஜி. ஹரிஸர்வோத்தம ராவ், திரு. எஸ். எஸ். அவதானியர். திரு. பாரிஜாதம் நாயுடு (பெண்கள் ஷேமாபிவிருத்தி அதிகாரி) திரு. டேனியல் (ஹரிஜன் க்ஷேமாபி விருத்தி) திருமதி ராஜாம்பாள், திரு. நச்சினார்க்கினியன், திரு. கே. அனுமந்தராவ், திரு. வி. கிருஷ்ணா, (முதியோர் கல்வி அதிகாரி, சென்னை கார்ப்பரேஷன்) திரு. வி. என். சர்மா, திரு. கே. வெங்கடஸ்வாமி நாயுடு, திருமதி ராஜாரத்னம், திரு. பி. பலராமன் (பச்சையப்பன் கல்லூரி சமூக ஸேவா கழகம்) திரு. எஸ். ஹரிஹரன் (விவேகானந்தா கல்லூரி சமூக ஸேவா கழகம்)

(4) முதியோர் எழுத்தறிவிப்பு திட்டம் நிறைவேற நகரச் சங்கத்துடன் ஒத்துழைக்கும்படி சென்னை சர்க்கார் கார்ப்பரேஷன் கல்வி ஸ்தாபனங்கள், வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனங்கள், பொதுச் சங்கங்கள் இவற்றை மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

(5) சென்னை முதியோர் கல்விச் சங்கம் தயாரித்துள்ள திட்டத்துக்கு வேண்டிய பணத்துக்காக மேயர் சமூகக்கல்வி (முதியோர் எழுத்தறிவிப்பு) நிதி ஒன்றை நிர்மாணிக்கும்படி மேயரை மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

(6) சமூக வரலாறில் டிப்ளோமா பட்டப் பாட முறையில் முதியோர் கல்வியைச் சேர்த்துக்கொள்ளும்படி சென்னை சர்வகலாசாலை அதிகாரிகளை மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

(7) சமூகக் கல்வி மாணவர் முகாம்களுக்கு ஏற்பாடு செய்யும்படி சென்னை நகரமுதியோர் கல்விச் சங்கத்தை மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

(8) கோடை காலத்தில் தனிப்பட்ட கல்லூரிகள் மட்டும் முதியோர் கல்வி முகாம்களை நடத்துவதற்குப் பதிலாக எல்லாக் கல்லூரிகளும் சேர்ந்து நகரில் நடத்த அனுமதிக்குமாறு கல்வி இலாகா அதிகாரியை மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

(9) தேவைக்கேற்ப புத்தக சப்ளை இருக்கும்படியாக முதியோர் கல்வி புத்தகங்களை எழுதுபவர்களுக்கும், பிரசுரிப்பவர்களுக்கும் மான்யம் அளிக்கும் தங்களுடைய திட்டத்தை விஸ்தரித்து, அதற்கு விரிவான பிரசாரம் நடத்தும்படி சென்னை சர்க்காரை மககாநாடு கேட்டுக்கொள்கிறது.

(10) முதியோர் கல்விப் பள்ளிக்கூடங்களில் வேலை செய்யும் பயிற்சி பெற்ற, பயற்சி பெறாத ஆசிரியர்களுக்கு கொடுக்கப்பட்டு வரும் அலவன்சுகள் போதாது என்று மகாநாடு அபிப்பிராயப்படுகிறது. பயிற்சி பெற்றவர்களுக்கு ரூ. 20-ம் பயிற்சி பெறாதவர்களுக்கு ரூ. 15-ம் ஆக உயர்த்தும்படி சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

(11) முதியோர் கல்வி ஸ்தலங்களை மேற்பார்வையிடுவதற்காக பள்ளிக்கூட ப்ரத்யேக உதவி இன்ஸ்பெக்டர்களையோ அல்லது வேறு அந்தஸ்துடன் கூடியவர்களையோ நியமிக்கும்படி சர்க்காரை மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

(12) நாளொன்றுக்கு குறைந்த பக்ஷம் ஒருமணி நேரமாவது எழுத்தறிவில்லாத தங்களுடைய தொழிலாளிகள் எழுத்தறிவு பெறுவதற்காக ஒதுக்கும்படியும் அங்ஙனம் எழுத்தறிவு பெற்ற முதியோர்களுக்கு போனஸ் வழங்கும்படியும் தொழிற்சாலைகள், வர்த்தகக் கைத்தொழில் ஸ்தாபனங்கள், இவற்றின் சொந்தக்காரர்களை நடவடிக்கை எடுக்கும்படி சென்னை சர்க்காரை மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

மகாநாடு வெற்றி பெற உதவிய திரு. எஸ். சச்சிதானந்தம் பிள்ளை, மேயர் திரு ராமனாதம் செட்டியார், திரு கே எஸ் ராமஸ்வாமி சாஸ்திரி, திரு. ஜி. ஹரிஸர்வோத்தராவ், திரு. மா. பொ. சிவஞான கிராமணியார், திரு டி. ஜே. ஆர். கோபால், திரு. எஸ். ஐராவதம், திரு. பி எஸ். சுப்பையா, மிஸ்டர் எல். வி. ரிச்சேட், திருமதி ராதா, திருமதி ராஜரத்னம், திரு. எஸ். எஸ். அவதானியர், பண்டிட் நடேசன், திரு. முருகேசபாகவதர் ஆகியோருக்கு திரு. அ. திருஞான சம்மந்தம் வந்தனோபசாரம் கூறினார்.

திரு. தி. ஜ. ரா. கோபால்

நமது முதியோர் கல்வி பத்திரிகை ஆசிரியரும், தென்னிந்திய முதியோர் கல்வி சங்க நிர்வாகக் காரியதரிசியுமான திரு. தி. ஜ. ரா. கோபால், மலபார் முதியோர் கல்விச் சங்கத்தாரின் அழைப்பின் பேரில் 1 வார காலம் சுற்றுப் பிரயாணம் செய்ய சென்றிருக்கிறார்.

அதன் நிகழ்ச்சிகளும், விபரங்களும் அடுத்த இதழில் வெளிவரும்.

'நிர்வாகி'
'முதியோர் கல்வி'

எழுத்தறிவின்மைக்கு சாவுமணியடியுங்கள்!

[ஜயன்]

அன்று நான் முதியோர் கல்வியை முழு மூச்சுடன் எதிர்த்தேன்! முதியோர் கல்வி என்று ஒரு ஸ்தாபனம் இருக்குமாயின் அதைவிட பைத்தியக்காரத்தனம் வேறு ஒன்றுமில்லைஎன எண்ணினேன்! இதனால் நம் நாட்டுக்கு நன்மையில்லை என நகைத்தேன்! முதியவருக்கு பாடம் சொல்லிக்கொடுப்பதாம்! விந்தையிலும் விந்தை! என விரக்தியுடன் "ஐந்தில் விளையாதது ஐம்பதில் விளையுமா" என கூறினேன்.

ஆனால் இன்று...? என் அனுபவத்திலே ஏற்பட்ட—முதியோர் கல்வி வேண்டும். இது இன்றியமையாதது. இன்று அது பரிபூரண தொண்டாற்றுமாயின்—விடா முயற்சியுடன் உழைக்குமாயின்—சலியாமல் சமூக தொண்டாற்றுமாயின்—நாம் வசிக்கும் இப்பாரதநாட்டின் சுதந்திரத்துக்கு மட்டுமல்ல, காந்திஜியின் கனவை நினைவாக்க மட்டுமல்ல, இவ்வுலகத்திலே நம் நாட்டின் புகழ் ஓங்கி நிற்க, இவ்வணுகுண்டு நாட்டிலே நம் பாரத தேசம் உச்சாணி கிளைகளிலே ஓங்கி நிற்க உதவும் ஓர் உன்னத ஸ்தாபனம் என முடிவுக்கு வரலானேன்.

அதன்படி இக்கட்டுரையை எழுத காரணம். இன்றும் முதியோர் கல்வியை எதிர்த்து பிரசாரம் செய்கிறவர்கள், எதிர்த்துக்கொண்டிருந்தவர்கள், எதிர்த்துக் கொண்டிருப்பவர்களுடைய கண்களை திறக்க என் அனுபவத்தை அவர்களுக்கு தெரிவிக்கத்தான் கூறுகிறேன் :—

அன்பர்களே! கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்! நம் நாட்டின் ஏழைகளை—கல்வி அறிவு இல்லாத—மக்களை நோக்குங்கள்! இன்று உங்களில் சில பேருக்கு நம் கிராமங்களில் வசிக்கும் மக்களைப்பற்றி—அவர்கள் வஞ்சிக்கப்படும் விதத்தைப்பற்றி தெரிந்திருக்கலாம்.

இன்று பெரிய நகரங்களின் ஜீவநாடியான கிராமத்து மக்கள் வஞ்சிக்கப்படுவது! அவர்கள் வாழ்க்கை தரம் உயராததற்கு காரணம் கல்வி அறிவு இல்லாததனால். இப்படி நம் சகோதரர்கள் ஓர் பக்கம் வஞ்சிக்கப்படுவதும், மற்றோர் பக்கம் எழுத்து வாசனை இல்லாமல் மூழ்கிகிடக்கும் அறியாமையாலும், அவர்களை திருத்துவதில் முனைந்த முதியோர் கல்வி ஓர் உன்னத ஸ்தாபனம் இல்லையா?

நாம் எல்லோரும் சமம், நாம் எல்லோரும் இந்நாட்டின் மன்னர் என்ற பிரசாரத்தின் பயனால் இது மாறுமா?

மகாத்மா காந்தியின் கனவை நினைவாக்க விரும்பும் தேசத் தொண்டர்கள், "எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் ஓர் குலம்" என்று அன்று பாடின பாரதியாரின் கனவை நினைவாக்க விரும்பும் தேசாபிமானிகள் இன்று கல்வி அவசியமில்லை என்று எதிர்ப்பதுதான் உகந்ததா? சுதந்திர இந்தியாவின் லக்ஷியம் கல்வி. முதியோர் கல்வி முதியவர்கள் மட்டும்தான் படிக்க வேண்டுமென்ற அர்த்தமில்லை. படிக்கத் தவறினவர்கள், பணமில்லாமல் கல்வியை விட்டவர் எல்லோரும் படிக்க வேண்டுமென்றுதான் கோருகிறோம். முதியவர்களுக்கு மூளையில் படிப்பு ஏறாது என்று சில நண்பர்கள் எண்ணுகிறார்கள். அது தவறு. இன்று அவர்கள் ஊக்கமாக உழைத்து படித்தார்களானால் என்றென்றைக்கும் அழிக்க முடியாத ஓர் சிரஞ்சிவி பொருளாக கல்வி யமைந்துவிடும்.

அதன் பயன், இன்று நிலவும் அறியாமை ஒடுங்கி, ஒற்றுமை ஏற்பட்டு, அணுகுண்டு அல்ல, இதைப்போல் பல உன்னதமான சிறந்த விஞ்ஞான ஆராய்ச்சிகளை நம் இந்திய மக்கள் ஆக்கவேலைகளாக அறிய உதவி புரியும்.

அதுமட்டுமல்ல ஒவ்வொரு இந்தியனும் தன் தாய் நாட்டின் பண்பு என்ன என்பதை உணர்ந்து, சுதந்தரத்தை காப்பாற்றி மனித தன்மையாக, ஒற்றுமையாக நம் சுதந்திர தந்தையின் கொள்கையான, அஹிம்சை, சத்தியம், பிறருக்கு உதவி செய்தல் போன்ற எண்ணங்கள் உதிக்கும்.

இன்று உலகத்திலே பதவி, பணம் போன்றவைகள் இன்று வரும் நாளை அழியும். ஏன் உலகத்தையே அழிககக் கூடிய ஆயுதம்

(70-ம் பக்கம் பார்க்கவும்)

செய்தி சுருள்

சென்னை ராஜ்யத்தில் முதியோர் கல்வி பள்ளிக்கூடங்கள்

இவ்வாண்டு முடிவிற்குள் 2,300 பள்ளிகள் ஏற்படுத்த சர்க்கார் முடிவு

இப்பொழுது சென்னை ராஜ்யத்தில் 1,954 முதியோர் கல்வி பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இந்த ராஜ்யத்தில் மொத்தம் 2300 முதியோர் பள்ளிகளை ஏற்படுத்த வேண்டுமென்ற லட்சியம் இந்த வருஷ இறுதிக்குள் பூர்த்தியாகிவிடும் என்று கல்வி இலாகா அதிகாரியொருவர் கூறினார்.

முதியோர்களுக்கு கற்பிப்பதற்காக 1,379 உபாத்தியாயர்களுக்கு சென்னை சர்க்கார் பயிற்சி அளித்திருக்கின்றனர் என்று அவர் மேலும் கூறினார்.

பத்திரிகை படித்தல்

முதியோரிடையே தற்குறியைப் போக்க மூன்று ஆண்டுகள் வரை சென்னை ராஜ்யத்தில் தினமும் ஒன்றரை மணி நேரம் வரை வகுப்புகள் நடைபெறுகின்றன. இவ்வகுப்புகளின் நோக்கமாவது முதியோர் சிறிய பாடங்களை எழுதப் படிக்க கற்றுக் கொள்ள வேண்டுமென்பது.

பத்திரிகைப் படித்து உலக விஷயங்களை அறிவதற்கு உற்சாகமும் ஊட்டப்படுகிறது. முதியோர்களுக்கு கல்வி எவ்வாறு கற்பிப்பது என்பதைக் குறித்து உபாத்தியாயர்களுக்கு சுமார் 45 நாட்கள் வரை பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி பெற்ற உபாத்தியாயர்கள் ரூ. 8 சம்பளம் பெறுகின்றனர். தங்கள் பள்ளிக்கூடங்களில் இரவு வேளையில் விளக்கு மற்றவைகளுக்கு ரூ. 4 அலவன்ஸ் பெறுகின்றனர்.

விவசாயம் சுகாதாரம் கல்வி முதலியவைகளைப் பற்றிய பிலிம் முதியோர்களுக்கு காட்டப்படுகின்றது. சென்ற ஆகஸ்டில் சென்னையில் 7-ம், மதுரையில் 9 படங்களும் காட்டப்பட்டன.

விழுப்புரத்தில் முதியோர் கல்வி

திரு. ராமசாமி சாஸ்திரியார் பிரசங்கம்

31-10-'51 விழுப்புரம் தாலுக்கா ஆபீசில் நடந்த விழுப்புர தாலுக்கா முதியோர் கல்வி கமிட்டி கூட்டத்தில் தென்னிந்திய முதியோர் கல்வி கமிட்டி தலைவர் திரு. கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியார் விஜயம் செய்து பேசுகையில் மற்ற இடங்களைவிட இந்த ஜில்லாவில் முதியோர் கல்வி சம்பந்தமாக விசேஷ பங்கெடுத்துக்கொண்டிருக்கிறது போற்றத்தக்கதென்றும் முதியோர் கல்வி ஆசிரியர்களுக்கு தற்பொழுது கொடுத்துவரும் சம்பளம் மிகவும் குறைவு என்றும், ரூபாய் இருபதாக கொடுக்க வேண்டுமென்றும் இது சம்பந்தமாக சென்னை சர்க்காருக்கு சிபார்சு செய்திருப்பதாயும், இந்திய யூனியன் கல்வி மந்திரி ஜனப் ஆஸாத் முதியோர் கல்வி விஷயத்தில் விசேஷ பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்களென்றும் கூடுமானவரை முதியோர் கல்வியை வெற்றிகரமாக்கும்படி செய்யவேண்டுமென்றும் கூறினார். மகாத்மா காந்தி பாடசாலை தலைமை ஆசிரியர் திரு. பெ. சு. லெக்ஷ்மண ஸ்வாமி, இப்பொழுது கொடுத்துவரும் சம்பளம் ஆசிரியர்களுக்கு போதவில்லையென்றும் சர்க்காரவர்கள் சம்பளங்களை உயர்த்தி கொடுக்க வேண்டுமென்றும் கூறினார். நகரிலுள்ள எல்லா உத்தியோகஸ்தர்களும் வந்திருந்தனர். திண்டிவனம் சப்-கலெக்டர் திரு. வெங்கடேசனும் வந்திருந்தார். தாசில்தார் திரு. ரெங்கசாமி கூட்டத்திற்கு வந்தவர்களை வரவேற்றார்.

திருச்சி முதியோர் கல்வி கமிட்டி

திருச்சி ஜில்லா முதியோர் கல்வி கமிட்டி கலெக்டர் திரு. சார்லஸ்ஜான் தலைமையில் கூடி, கிராம மக்களின் நலனுக்கான வேலைகளில் அதிக கவனம் செலுத்துவதென முடிவு செய்தது. பாமர மக்களிடையே இது குறித்து எடுத்துரைப்பதற்காக, முதியோர் கல்வி வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு விவசாயம், சுகாதாரம், கூட்டுறவு கைத்தறி நெசவு போன்ற வேலைகளில் பயிற்சி தருவதெனவும் அதற்கான முகாம்கள் அமைப்பதென்றும் முடிவு செய்தது.

காரியதரிசி திரு. வி. வெங்கடசுப்பய்யா நன்றி கூறினார்.

முதியோர் கல்வியைப் பரப்ப ஆசிரியர்கள் முன்வர வேண்டும்

வேலூர் நகரசபைத் தலைவரின் வேண்டுகோள்

"தற்சமயம் வேலூர் முதியோர் பள்ளிக்கூடங்களை நடத்தும் உபாத்தியாயர்களுக்கு சர்க்கார் தரும் ஊதியம் போதாது என்று எனக்குத் தெரியும். சேவா உணர்ச்சியுடன் இந்த அலுவலைச் செய்வதற்குக்கூட முடியாதபடி அவ்வளவு குறைவாகச் சம்பளம் தரப்படுகிறது. முதியோர் கல்வியைப் பரப்புவதற்கு முன் வருகிறவர்களுக்குத் தகுந்த ஊதியம் கொடுப்பதற்கு நகரசபையும் ஏற்பாடு செய்யும் என்றும் நகரசபை சார்பிலும் கமிஷனர் சார்பிலும் உறுதி கூறுகிறேன். ஆகவே நாட்டின் நலனைக் கருதி தியாகபுத்தியுடனும், சேவா உணர்ச்சியுடனும் இந்த அலுவல்களைச் செய்ய முன்

224718

வருமாறு உபாத்தியாயர்களைக் கேட்டுக் கொள்கிறேன்'' என்று வேலூர் நகரசபைத் தலைவரான திரு. ஏ. கே. மாசிலாமணி செட்டியார் முனிசிபல் ஆரம்ப ஆசிரியர் சங்கத்தின் ஆதரவில் முனிசிபல் பள்ளிக்கூடத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் தெரிவித்தார்.

தான் ஆசிரியராக இருந்ததால் ஆசிரியர்களின் கஷ்டம் தனக்குத் தெரியும் என்றும் ஆரம்ப ஆசிரியர்களை ஆரம்ப கல்வியின் முதுகெலும்பு என்றும், சென்னையில் ஊழியம் செய்யும் ஆசிரியர்கள் சம்பளத்திற்கும் கிராமங்களில் வேலை செய்யும் ஆசிரியர்களின் சம்பளத்திற்குமிடையேயுள்ள வித்தியாசத்தை அகற்றும் உத்தேசம் இருப்பதாகவும் ஆகவே பல உபாத்தியாயர்கள் கிராமங்களில் சேவை செய்வதற்கு ஆசைப்படுவார்கள் என்றும் தற்கால நிலைமைக்குத் தகுந்தவாறு கல்வித் திட்டத்தை மாற்றும் நோக்கத்துடன்தான் அடிப்படை கல்வி, முதியோர் கல்வி ஆகிய திட்டங்களை சர்க்கார் அமுல் நடத்தி வருவதாகவும் ஆகவே ஊதியத்தை மாத்திரம் கருதாமல், சேவா உணர்ச்சியுடனும் ஆசிரியர்கள் இந்தப் பொறுப்பை ஏற்க முன்வரவேண்டும் என்று கமிஷனர் திரு. எல். சி. ரிச்சர்டு கூறினார்.

காரியதரிசி திரு. டி. ஜி. சாமிநாதன் வந்தனம் கூறினர்.

தஞ்சை தாலுக்கா முதியோர் கல்வி ஊழியர் சங்க ஆரம்ப விழா

தஞ்சை தாலுக்கா முதியோர் கல்விச் சங்கத்தின் ஆதரவில் 23–9–'51 பகல் 10 மணிக்கு சங்கத் தலைவர் திரு. சி. ஏ. நாராயணசாமி அய்யர் விழாவைத் துவக்கிவைத்தார். செயலாளர் திரு. வி. சாரங்கபாணி நாயுடு, விஜயம் செய்திருந்த பல அறிஞர்களையும் முதியோர் கல்வி ஊழியர்களையும் வரவேற்றார்கள். ஊழியர் சங்கச் செயலாளர் திரு. ஏ. ஆர். சுப்ரமணிய அய்யர் அறிக்கை வாசித்தார். தென்னிந்திய முதியோர் கல்விச் சங்க நிர்வாகச் செயலாளர் திரு. டி. ஜே. ஆர். கோபால் சங்கத்தின் அவசியத்தையும் ஊழியர்களின் கடமைகளையும் பற்றிப் பேசினர். அதைத் தொடர்ந்து திரு. அவதானியார், திரு. பி. எஸ். வெங்கடகிருஷ்ண பிள்ளை, தஞ்சை மாவட்ட உதவிக் கண்காணிப்பாளர் திரு. கே. எஸ். சம்பந்தம் ஆகியோர் பேசினர்கள்.

பிற்பகல் 4 மணிக்கு மன்னர் மராட்டியர் இலவச உயர்நிலைப்பள்ளியில் ஊழியர்களின் அலுவல் கூட்டம் நடைப்பெற்றது. திரு. தேவ இரக்கம் தலைமை வகித்தார்கள். ஊழியர்கள் பிற்காலத் திட்டத்தைப் பற்றிப் பேசினர்கள். மாலை 6 மணிக்கு ஊழியர்களின் பிரசார ஊர்வலம் நடைப்பெற்றது. பின்னர் வடக்குவாசல் நாட்டாண்மைக் கழக முதியோர் கல்வி நிலையத்தில் திரு. பி. எஸ். வெங்கடகிருஷ்ண பிள்ளை அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைப்பெற்றது. திரு. டி. டி. இராமச்சந்திரன் அவர்கள் கடவுள் வணக்கம் பாடினர். சௌராஷ்டிர முதியோர் கல்வி நிலையம், வடக்குவாசல் முதியோர் கல்வி நிலைய முதியோர்கள் தங்கள் ஆர்வத்தையும் பள்ளிகளில் சேர்ந்து பெற்ற பலன்களையும் விளக்கியுரைத்தனர். திரு. எஸ். தனசாமி வந்தனோபசாரம் கூற தேசிய கீதத்துடன் விழா சிறப்புற முடிவுபெற்றது.

மதுரை ஜில்லா முதியோர் கல்வி ஊழியர்கள் கூட்டம்

முதியோர் கல்வி ஊழியர்கள் கூட்டமொன்று மதுரை ஜில்லா ஆர்கனைஸர் திரு. டி. ஆர். ராகவன் முயற்சியால் மதுரை ஜில்லா கலெக்டர் திரு. என். எஸ். அருணாசலம், ஐ.சி.எஸ். அவர்கள் தலைமையில் 16-10-'51 செவ்வாய்க்கிழமை மாலை 5-30 மணிக்கு கலெக்டர் பங்களாவில் ஆரம்பமாயிற்று. மதுரை நகர சபைத் தலைவர் திரு. டி. கே. ராமா, மதுரை நகர மத்ய முதியோர் கல்விக் கமிட்டி காரியதரிசி திரு. எல். டி. முத்துராம், ஜில்லா சப்ளை ஆபீஸர் திரு. பி. வி. நாராயணசாமி செட்டியார், மதுரைக் கல்லூரி ஆசிரியர் திரு. சேஷாத்திரி, மதுரை நகர சபை அங்கத்தினர் திரு. வி. எல். ராமசாமி, ஆசிரியர் திரு. பி. எஸ். கந்தசுவாமி உள்பட பல பிரபலஸ்தர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர். ஜில்லாவில் கிராமாந்திர பாகங்களில் முதியோர் கல்வியை சர்க்கார் உதவியுடன் பொது மக்கள் உதவியையும் பெற்று திறம்பட நடத்துவது குறித்து விவாதம் நடைபெற்றது. முதியோர் கல்விப் போதனா முறை பள்ளிகளை கோடைகால விடுமுறையில் திறப்பது, ஜில்லாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 20 முகாம்களை கிராமாந்திரப் பகுதிகளில் ஆரம்பித்து நடத்தப் பிரதேசக் கமிட்டிகள் திறப்பது, அவற்றிற்கான பொருளாதாரத்தைத் திரட்டுவது, முதியோர் கல்விப் பள்ளிகளைப் பார்வையிட தாலுக்காவாரி கௌரவப் பார்வையாளர்களை நியமிப்பது, ஜில்லா சம்பந்தப்பட்ட இதர இலாகா உத்தியோகஸ்தர்களின் ஒத்துழைப்பைப் பெறுவது, ஜில்லா முதியோர் கல்விக் கழகம் அமைப்பதுப் போன்ற பல்வேறு முக்கிய பிரச்னைகளைப்பற்றி பேசப்பட்ட பின் கலெக்டர் தம்மாலான சகல உதவிகளும் புரிவதாக வாக்களித்தார். ஜில்லா முழுமையிலுமுள்ள முதியோர் கல்வி ஊழியர்கள் கல்வி நிபுணர்கள், அதிகாரிகள் ஆகியோர்களின் ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் பெற மற்றொரு கூட்டத்தை மதுரையில் கலெக்டர் தலைமையில் கூட்டுவதென முடிவு செய்யப்பட்டபின் கூட்டம் இனிது முடிவுற்றது.

திண்டிவனம் தாலுக்கா முதியோர் கல்வி நிதி

திண்டிவனம் தாலுக்கா முதியோர் கல்வி நிதிக்கு உதவுவதற்காக 4-11-'51 திண்டிவனம் ஸ்ரீ கிருஷ்ண பிக்சர்ஸ் பாலெஸ் லிமிடெட் கட்டிடத்தில் சகோதரி ஹேமா பத்மினி (பி.ஏ., ஆனர்ஸ்) பதம்பாட, குமாரி ஹேமாமாலினி (வழுவூர் பி. ராமய்யா பிள்ளையின் சிஷ்யை) பரத நாட்டிய, அபிநயக் கச்சேரி ஒன்றை நடத்திக்கொடுத்தார். புதுச்சேரி, பிரஞ்சிந்திய பகுதிகளின் இந்திய ஸ்தானிகர் திரு. ஆர். கே. தாண்டன் (ஐ. ஏ. எஸ்.) தலைமைவகித்தார். கச்சேரியின் ஸ்வராஸ்யத்தை அனுபவிப்பதற்காகத் திரளான ஜனங்கள் கூடியிருந்தனர். ஜில்லா அதிகாரிகள் உள்பட பல பிரபல பிரமுகர்களின் ஒத்துழைப்புடன் சப்-கலெக்டர் அவர்கள் சிறந்த ஏற்பாடுகள் செய்திருந்தார். விசேஷ அழைப்பின்பேரில் தென்னிந்திய முதியோர் கல்விச் சங்கத்தின் தலைவர் திரு. கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியார், நிர்வாக காரியதரிசி திரு. டி. ஜே. ஆர். கோபால், பிரசார காரியதரிசி திரு. எஸ். ஐராவதம் ஆகிய மூவரும் பங்கு எடுத்துக்கொண்டார்கள். திருமதி ஆர். கே. தாண்டனும் கலந்துகொண்டு கச்சேரியின் உன்னதயத்தை உவகையுடன் கண்டு களித்தார். குமாரி ஹேமா மாலினி அன்று இணையற்ற வகையில் நாட்டியம் ஆடினாள்.

கூட்டத்தில் திரு. ராமஸ்வாமி சாஸ்திரியார் பேசியது, உள்ளத்தினூடே ஊறும் துல்லியமான உணர்ச்சிகளின் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. பரத நாட்டியம் சிறந்த கலை என்றும், அதைச் சரிவர அறிந்து, தக்க வகையில் கையாண்டால் பக்தர்களின் உள்ளக்கிளர்ச்சியை அளவிட முடியாதென்றும், கலையில் பாண்டித்தியம் பெற்றவர்கள், குமாரி ஹேமா மாலினியின் கலைத்திறனை அபாரமாக மெச்சுகிறார்கள் என்றும், முதியோர் கல்வி இயக்கத்தைவிட உயர்ந்த பொதுஜன சேவை வேறில்லை யாதலால் அதற்கு உதவ அவள் முன்வந்தது போற்றற்குரியது. இந்த இயக்கத்தின் முக்கியத்தை சந்தேகிப்பது பலரே. இப்போது பலரும் அங்கீகரிக்கத் தலைப்பட்டுவிட்டார்கள். எனவே, பொது ஜனங்கள் தாமாகவே முன்வந்து செய்யும் இந்நன் முயற்சிக்கு சர்க்கார் உதவவேண்டியது அவசியமென்றார். சென்னை சர்க்காரின் புதிய உத்தரவு நல்ல முறையானதாகையால், கல்வி இலாகா மட்டுமன்றி எல்லா இலாக்காக்களையும் சேர்ந்தவர்களும் இயக்கத்துக்கு ஆதரவு காட்டவேண்டுமென்பதே மேற்படி உத்தரவு என்றும், இந்த உத்தரவை தென்னாற்காடு ஜில்லா நன்கு நிறைவேற்றி வைத்துள்ளதென்றார். முதியோர் கல்விச் சங்கத்தின் சேவை காரணமாக எங்கும் ஏற்பட்டுள்ள விழிப்பைப்பற்றி திரு. சாஸ்திரியார் குறிப்பிட்டு, ஜில்லா கலெக்டரின் நற்சேவையைப் பாராட்டினார். நாட்டிய, சங்கீதக் கச்சேரிகள் மூலம் முதியோர் கல்விக்கு ஒவ்வொரு தாலுக்காவிலும் ஆக்கம் தேடுமாறு அவர் உத்தரவிட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. திண்டிவனம் சப்கலெக்டர் திரு. வெங்கடேசனும், அன்னாருடன் ஒத்துழைத்த அதிகாரிகளும், பிரமுகர்களும் பாராட்டுக்கு உரியவர்கள். வைபவத்தில் தலைமை வகிக்க திரு. தாண்டன் இசைந்தது திண்டிவனம் தாலுக்கா கமிட்டியின் அதிர்ஷ்டமாகும்.

திரு. தாண்டன் பிரசங்கம்

திரு. ஆர். கே. தாண்டன் ஆங்கிலத்தில் பேசுகையில் கூறியதாவது :—

“முதியோர் கல்வி என்பது பொதுமக்களைப் பூரண பிரஜா உரிமைக்கும், பொறுப்புகளுக்கும் தயாராக்குவதுதான்; இது மகத்தான சேவை; எனவே இச்சேவையில் பங்கு கொள்ள பாக்கியம் கிடைத்ததில் எனக்குப் பெரு மகிழ்ச்சி. பொது மக்களிடையே எழுத்தறிவின்மை பெரிதும் படர்ந்து கிடக்கிறது; அவர்களின் ஒத்துழைப்பில்லாமல் இச்சிக்கலான பிரச்னையை தீர்க்க இயலாது; அரசாங்கமும் கண்டிப்பாக உதவ வேண்டியதுதான். முதியோர் கல்வி இயக்கத்துக்கு ஆக்கம் தேடவேண்டிய முக்கிய பொறுப்பு உத்தியோகப் பற்றற்றவர்களுடையதே. பெரிதும் முன்னேற்றம் அடைந்துள்ள பிரிட்டனைப் போன்ற நாடுகளில்கூட சமூக சேவை இயக்கம் ஒவ்வொன்றும் பொது மக்களின் ஆதரவினாலும் ஒத்துழைப்பினாலுமே ஓங்குகின்றன; இதற்குப் பக்கபலமாக ராஜாங்கம் உதவி அளிக்கிறது. இயக்கத்துக்கு வளர்ச்சி காண்பதில் தென்னாற்காடு ஜில்லா அரிய வேலை செய்து, ராஜ்யத்தின் மற்ற பகுதிகளுக்கு வழிகாட்டியாக விளங்குவது கண்டு நான் மட்டில்லா சந்தோஷம் கொள்ளுகிறேன். திரு. விஜயராகவனின் சேவைக்கு ஜில்லாவாசிகள் நன்கு நன்றி செலுத்தி, அன்னாரின் புதல்விகளுக்கு சிறந்த வரவேற்பளித்துள்ளார்கள். இரு சகோதரிகளுக்கும் வாழ்க்கையின் எல்லா துறைகளிலும் வெற்றி கிட்ட வேண்டுமென்றும், திண்டிவனம் தாலுக்கா முதியோர் கல்விக் கமிட்டியின் முயற்சிகள் பலனுற வேண்டுமென்றும் பிரார்த்திக்கிறேன்.”

திரு. ரோச்-விக்டோரியாவின் யோசனையையொட்டி விழுப்புரம் தாலுக்கா முதியோர் கல்விக் கமிட்டியினால் தயாரிக்கப்பட்ட இரண்டு பொன் பதக்கங்களையும் திண்டிவனம் சப்-கலெக்டரின் மனைவியார் பெருத்த கரகோஷங்களுக்கிடையே மாலினிக்கும் பத்மினிக்கும் வழங்கினார்.

உங்களுடைய வியாபாரம் செழித்தோங்க வேண்டுமானால், மாதாந்திர இதழ்களிலே 'முன்னணி'யில் நிற்கும் நமது பத்திரிகையில் விளம்பரப்படுத்துங்கள்.

பதிமூன்றாம் பாடம்

குளம்

ள ளா ளி ளீ ளு ளூ ளெ ளே ளொ ளோ

வெள்ளி வெளிச்சம்
கிளி குள்ளம்
கொள்ளு வேளை
பள்ளம் நாளை
பிள்ளை முள்ளு

முள் வேலி
செல்லப் பிள்ளை
மேடு பள்ளம்
மாலை வேளை
வெள்ளி வேலை

ளை ளௌ ள்

பள்ளிக்கூடப் படிப்பு வேறு
நம் படிப்பு வேறு
விளக்கு வைத்துவிட்டு படி
களத்து மேட்டுக்குப் போ

பதினான்காம் பாடம்

பணம்

ண ணா ணி ணீ ணு ணூ ணெ ணே ணொ ணோ

துணி வெண்மை
பண்ணை திண்ணை
மணம் புண்ணாக்கு
தண்ணீர் சணல்
தண்டு கிண்ணம்

கடைக் கண்
வெள்ளிக் கிண்ணம்
சணல் நார்
வீட்டுத் தண்ணீர்
நூல் துணி

ணை ணௌ ண்

பசுவுக்குப் புண்ணாக்கு வை
வீட்டுத் திண்ணை பள்ளிக்கூடத்துக்கு நல்லது
வீதிக்கு வீதி திண்ணைப்
பள்ளிக்கூடம் வேண்டும்

படிக்கும் தொண்டரின் பெயரும், விலாசமும் } ....

படிப்பிப்பவரின் பெயரும், விலாசமும் } ....

224716

பதினைந்தாம் பாடம்

சன்னல்

ன	கனம்	கன்னான்	னா
	பனி	சன்னல்	
னி	தீனி	பன்னீர்	னீ
	பனை	தென்னை	
	நான்கு	பதினேழு	
னு			னூ
	பனித் தண்ணீர்		
னெ	சன்னல் கதவு		னே
	பதினெட்டு		
னொ	பனை மரம்		னோ
	பன்னீர் தெளி		

னை னௌ ன்

கன்னான், தட்டான், கொத்தன்
தொழிலாளர்கள்

தொழிலாளர்களுக்குப் படிப்புப்
பலன் தரும்

நன்றாகப் படிக்கத் தெரிந்துகொள்

பதினாறாம் பாடம்

வயல்

ய	யானை	குயவன்	யா
	கயிறு	வளையல்	
யி	வயது	பயிர்	யீ
	மெய்	பயித்தியம்	
	நெய்	தையல்	
			யூ
	யானைப் பாகன்		
யெ	நொய்யல் நதி		யே
	கயிறு திரி		
யொ	கல் வளையல்		யோ
	தையல் வேலை		

யை யௌ ய்

வயல்களுக்குத் தண்ணீர் பாய்ச்சு

வெய்யில் வேளைகளில் பயிரிடாதே

பொழுது போக்கும் வேளையில்
படிக்கலாம்

மூன்றும் பகுதி

படியாத பட்டுசாமி

[இந்த சிறு நாடகம் திரு. கோவிந்தசாமி, காரியதரிசி ஜிஞ்ஜி த்தாலுக்கா, முதியோர் கல்விச் சங்கம், தென்ஆற்காடு ஜில்லா, அவர்களால் எழுதப்பட்டது. புதிதாக படித்தவர்கள் சுலபமாக இதை படிப்பது மல்லாது, நாடகமாக நடிக்கவும் உதவும்—ஆசிரியர்.]

[முன் இதழ் தொடர்ச்சி]

சீன் 5

இடம்:—முதியோர் கல்வி பாடசாலை—அரங்கசாமி பாடம் சொல்லிக் கொடுக்கிறர்—நாட்டாண்மைதார் பாடசாலையை பார்வையிடுகிறர்.

அ. சாமி:—சரி, எல்லோரும் வந்து விட்டார்கள். நான் சொல்லுகிற பாட்டை சொல்லுங்கள்.

[நாட்டாண்மைதார் வருகிறர்]

நாட்:—என்ன உபாத்தியாயரே பள்ளிக்கூடம் சரியாக நடந்து வருகிறதா?

அ. சாமி:—எல்லாம் சரியாய் நடந்து வருதுங்க. முதியோர்களும் அக்கரையாகப் படிக்கிறர்கள்.

நாட்:—முதியோர்கள் அதிகம் இருப்பதால் இன்னும் ஒரு ஆசிரியரை நியமிக்கிறேன். வெளிச்ச வசதியும் குறைவாகத்தான் இருக்கிறது. இன்னும் ஐந்து லாந்தல்களும் வாங்கித் தருகிறேன். அடுத்த வாரத்தில் சடுகுடு போட்டிப் பந்தயமும், பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டியில் ஒரு நாடகமும், நடத்துவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். பரிசுகள் வழங்க ஏற்பாடு செய்கிறேன்.

அ. சாமி:—அப்படியே ஏற்பாடு செய்கிறேன்.

நாட்:—முதியோர்களே! நீங்கள் ஆசிரியர்களிடம் அன்பாய் நடந்து கொள்ளுங்கள். குருவே தெய்வம் என்ற முதுமொழியைமறந்து விடாதீர்கள். வயதில் முதியவர்களாயிருந்தாலும், பாடம் சொல்லிக் கொடுப்பவரிடத்தில் மரியாதையாக நடந்து கொண்டால்தான் சீக்கிரம் படிப்பு வரும். நான் வருகிறேன்.

சீன் 6

இடம்—புடவை விற்பவன்—குப்பாயி புடவை வாங்குகிறுள்.

குப்பாயி:—ஆரப்பா அது புடவை காரரே இங்குகொண்டா.

புடவை:—(இறக்கி வைத்து) இதோ பாருங்க. எந்த புடவை வேண்டுமென்று சொல்லுங்க. (புடவைகளுக்கு விலை சொல்லுகிறுன்)

குப்பாயி:—(புடவைகளை புரட்டிப் பார்த்து) இந்த புடவை விலை சொல்லுங்க.

புடவை:—எட்டாகால் ரூபா கொடுங்க.

குப்பாயி:—அதெல்லாம் இல்லீங்க, எதிர் வீட்டிலே ஆறே முக்கால் ரூபாயுக்கு எடுத்திருக்காங்க அந்த விலைக்கு கொடுத்தா குடுங்க. இல்லாட்டி எடுத்துகினு போங்க.

புடவை :—சரி காலங் காத்தாலே போனி பண்ணுவம். பணத்தைக் கொடுங்க.

குப்பாயி :— (பணம் எடுத்துக் கொண்டு வந்து) இந்தாங்க பத்து ரூபா நோட்டு. மீதி சில்லரை கொடுங்க.

புடவை :—(சில்லரை எண்ணி) இந்தாங்க எண்ணிப் பார்த்துங் கும்மா.

குப்பாயி :—(எண்ணிப்பார்த்து) சரி தான் வாங்க.

[போகிறான்]

வேலுசாமி :—எங்க குப்பாயி, பட்டு சாமி இல்லியா ?

குப்பாயி :—இல்லீங்க இப்பத்தான் வெளிய போனாரு.

வேலுசாமி :—என்ன புடவை புதுசா இருக்கு. வாங்கனியா ?

குப்பாயி :— ஆமாங்க. மல்லாக் கொட்டை வித்து ஒரு பத்துரூபா நோட்டு வச்சிருந்தங்க. இந்த புடவை ஆறே முக்கால் ரூபா மீதி சில்லரை சரியாய் இருக்குதாண்ணு பாருங்க.

வே :—(எண்ணிப்பார்த்து) தெரி யுமே நீ ஏமாந்து போயிருப்பண்ணு. உன்னாட்டம் படிக்காத பெண்க ளெல்லாம் இப்படித்தான் ஏமாந்து போவது வழக்கம். புடவைக்காரன் ஒரு ரூபா உன்ன ஏமாத்திட்டான்.

கு :— அடப்பாவி! எல்லாம் சில்ரயா குடுத்துட்டான். எனக்கு எண்ணத் தெரியல.

வே :—அதுக்குத்தான் கொஞ்சம் படிச்சிருக்கணுண்ணு சொல்ரது. உன்னாட்டம் படிப்பு தெரியாதவங் களுக்கு சொல்லிக் கொடுக்கத்தான் நம்ம ஊர்ல ராத்திரி பள்ளிக்கூடம் வச்சிருக்காங்க. அதல சேர்ந்து படிக்க சொன்ன உன் புருஷனுக்கு அக்கரை இல்லே.

பட்டு :—என்னப்பா வேலுசாமி என்ன சமாச்சாரம் ?

வே :—சமாச்சாரமா உன் பெண் டாட்டி புடவை வாங்கி கணக்குத் தெரியாத ஒரு ரூபா விட்டுட்டா. புடவைக்காரன் ஏமாத்திட்டு போயிட் டான். முதியோர் கல்வி பாட சாலேக்கு வந்து நீயும் கொஞ்சம் படிக் கட்டும்ணு சொன்னல் நீ கேக்க மாட்ட எத்தனே வகையில் உனக்கு நஷ்டம் வருதுண்ணு பாரு.

பட்டு :—அவளுக்குத்தான் படிக்கத் தெரியாதுண்ணு அந்த புடவைக் காரன் ஏமாத்தலாமா. என் கண்ல ஆப்பட்டானுண்ணு என்ன செய்ரன் பாரு.

வே :—அவ படிச்சிருந்தால் அவ ளால் ஏமாத்த முடியுமா? படிச்ச வங்க யாராவது ஏமாந்து போவாங் களாண்ணு பாரு. நீ கேட்டால் அவன் பதில் சொல்ல மாட்டான். நாட்டாண்தாரு கிட்ட போயி சொல்லு. விசாரிப்பாரு.

(போகிறான்)

பட்டு :—ஆமாம்பா. நீ சொல் றதும் ஒரு யோசனே தான். குப் பாயி வா போய் சொல்லுவம்.

(போகிறார்கள்)

(தொடரும்)